

# விமோசனம்

ஒரு மாதப் பத்திரிகை

| தொகுதி | ஆசிரியர்: | பகுதி |
|---|---|---|
| 1 | சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி | 9 |

பிரமோதூத-ஹு

## சித்திரை

புதுப்பாளையம்

**காந்தி ஆசிரமம்,**

திருச்செங்கோடு.


வருஷ சந்தா ... கூலி உள்பட ரூபாய் ஒன்று.

தனிப்பிரதி ... ன்று, தபாற்கூலி வேறு.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| காய் கடிக்கும்—படம் | 321 |
| தக்க சமயம் | 322 |
| மதுபானப் பொறி—படம் | 323 |
| சட்டசபை பழனி வாத்தியார் | 324 |
| முழு மோசம் | 329 |
| கடைக்குப் போனவன் கதி—படம் | 331 |
| டாம்பீக யாத்திரை—படம் | 332 |
| விமோசனத் திருநாள் | 334 |
| பெரிய தடை | 337 |
| பர்மாவில் மதுபானம் | 338 |
| பிரசாரகர்களின் அனுபவம் | 342 |
| மைசூர் மதுவிலக்குச் சங்கம் | 343 |
| இஸ்லாமிய வேதம் | 344 |
| திருமந்திரம் | 345 |
| ராவ் பகதூர் மிருத்யுஞ்ஜய ஐயரின் மரண சாஸனம் | 346 |
| குடிகாரன் மனைவி—படம் | 348 |
| பெண் மக்கள் தொண்டு | 349 |
| குடிகாரன் குடும்பம்—படம் | 350 |
| குப்பனின் பணி | 351 |
| குடியின் திருவிளையாடல்—படம் | 355 |
| கடற்கரைக் கிளிஞ்சல் | 356 |


---

"விமோசனம்" மாதப்பத்திரிகை வேண்டுவோர் ரூ. 1—0—0 வருஷ சந்தா தொகையுடன் "விமோசனம்" காரியதரிசி, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கு எழுதிப் பதிவுசெய்து கொள்ளலாம். அயல் நாட்டுக்கு அதிக தபாற்கூலி 0—2—0 சேர்த்து அனுப்பவேண்டும். தனிப் பிரதி எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் மற்ற விடங்களிலும் பெறலாம். விலை அணு ஒன்று. தபாலில் எழுதிப் பெற்றால் தபாற்கூலி சேர்த்து 0—1—6.

ரா. கிருஷ்ணமூர்த்தி,
உதவியாசிரியர்.

# விமோசனம்


| | | |
|---|---|---|
| தொகுதி 1 | பிரமோதூதஸு சித்திரைமீ | பகுதி 9 |





வேட்டை நாயைக் கையில் பிடித்துக்கொண்டு சாலையோடு போகும் ஏழைப் பிரயாணிகள் மீது ஏவுகின்றான் இந்தப் போலீஸ் காரன். ஆனால் "நாய் கடிக்கும் ஜாக்கிரதை!" என்று கம்பத்தில் விளம்பரம் போட்டிருக்கிறது. இவ் விளம்பரத்தினால் என்ன பயன்? நாயை யல்லவா துரத்தி யடிக்கவேண்டும்?

நாடெங்கும் கள்ளு சாராயக் கடைகளை வைத்துக் கோண்டு "குடிக்க வேண்டாம்" என்று சர்க்கார் பிரசாரம் செய்தல் இதைப் போன்றது தான். "விளம்பரம் வேண்டாம்; நாயைப் பிடித்து இழுங்கள்" என்று கதறுகிறான் வழிப் போக்கன். "பிரசாரம் போதும்; உங்கள் கடையை மூடுங்கள்" என்று ஏழைக் குடியானவன் முறையிடுகிறான்.

# தக்க சமயம்

தேச விடுதலைக்காக காந்தியடிகளின் தலைமையில், பெரிய சத்தியாக்கிரஹப் போர் நடந்து வருகிறது. ஆயிரக்கணக்கான சாத்வீகப் போர் வீரர்கள் இந்த தர்ம யுத்தத்தில் சேர்ந்து தங்கள் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்ய முன்வந்திருக்கிறார்கள். முன் எக்காலத்திலும் இல்லாத உணர்ச்சியும் உற்சாகமும் தேசமெங்கும், படித்தவர்கள் பாமரர்கள் எல்லாரிடையேயும் காண்கிறோம். கள்ளரக்கனை நாட்டிலிருந்து துரத்தி விமோசனம் பெறுவதற்கு தேசமக்கள் பெருமுயற்சி எடுக்க வேண்டிய சமயம் இதுவே யாகும்.

மகாத்மா காந்தி போர் தொடங்குவதற்கு முன்னால் விதித்த பதினொரு நிபந்தனைகளில் பூரண மதுவிலக்கை முதன்மையாகக் குறிப்பிட்டார் என்பதை நேயர்கள் அறிவார்கள். இந்தப் பதினொரு நிபந்தனைகளையும் சர்க்காரின் பதினொரு கோட்டைகளாக மகாத்மா கொண்டு, அவைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றத் தீர்மானித்துள்ளார். பல காரணங்களை முன்னிட்டு முதலில் உப்புவரிக் கோட்டையைத் தகர்க்கப் போர் நடத்தி வருகிறார்.

ஆனால் சர்க்காரின் மதுபானக் கோட்டையை அடிகள் மறந்து விடவில்லை. உப்புவரிக்கு அடுத்தபடி தாக்கவேண்டிய கோட்டை அதுதான் என்று மகாத்மா சொல்லியிருப்பதுடன், சாத்வீகப் போரில் சேராமலிருப்பவர்களெல்லாம், கள்ளை யொழிக்கும் முயற்சியில் இப்போதே ஈடுபட வேண்டு மென்றும் கட்டளை யிட்டிருக்கிறார்.

ஒரு புறத்தில் தொண்டர்கள் உப்பு வரியைத் தொலைக்க சத்தியாக்கிரஹப் போர் நடத்துகையில், மற்றொருபுறம் பொது ஜனங்கள் கள்ளுக் கடைகளை மூடப் பெருமுயற்சி செய்து வந்தால், சட்ட மறுப்பின்றியே பூரண மதுவிலக்குச் செய்து விடலா மென்பது அடிகளின் நம்பிக்கையாகும்.

தமிழ் நாட்டிலும் தமிழ் வருஷப்பிறப்பு நாளாகிய இன்றைய தினம் சத்தியாக்கிரஹத் தொண்டர்களின் முதற்படை திருச்சினாப் பள்ளியிலிருந்து கிளம்புகின்றது. தொண்டர்கள் தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி முதலிய பல ஊர்களின் வழியாக நடந்து சென்று வேதாரண்யம் சேர்ந்து உப்பு சத்தியாக்கிரஹம் தொடங்குவார்கள். இச்சமயத்தில் போரில் சேராமலிருப்பவர்களின் கடமை என்ன?

அனைவரும் தத்தம் நகரம் அல்லது கிராமத்தில் கள்ளு சாராயக் கடைகளை மூடுவதற்குப் பெருங்கிளர்ச்சி தொடங்க வேண்டும். இதற்கு தேசியத்தலைவர்களையோ, வேறு அயலாரின் உதவியையோ எதிர்பார்க்கக் கூடாது. ஆங்காங்குள்ள ஜனங்களே பெருமுயற்சி செய்து இன்று

பிறந்துள்ள பிரமோதூத வருஷம் முடிவதற்குள் கள்ளை அடியோடு ஒழித்துவிட்டால், நாட்டைப் பிடித்த ஒரு பெரிய பீடை நீங்குவதோடு, விடுதலைப் போருக்கும் சிறந்த உதவியாகும்.

தற்போது நடக்கும் சாத்வீகப் போர் தேசமெங்கும் மக்களின் தரும உணர்ச்சியை எழுப்பி யிருக்கின்றது. இத் தூய்மை வெள்ளத்தின் முன்னே பாவம் பழிகளுக்கு உறைவிடமான கள்ளு சாராயக் கடைகள் எப்படி எதிர்த்து நிற்கமுடியும்? இச சமயம் குடிகாரர்களுங்கூட கள்ளுப் புட்டியை உடைத் தெறிந்துவிட்டு தேச பக்தர்களாக முன் வரவேண்டும். கள்ளுக் குத்தகைக்காரர்களும் அத் தீய வியாபாரத்தை விட்டொழிக்க வேண்டும். இவ் வருஷத்தில் நாடெங்கும் ஜனங்கள் கண் விழித்து மது பானத்தை யொழித்து விட்டார்களானால், சுயராஜ்யத்தின் உண்மைப் பொருள் நன்கு வெளிப்பட்ட தாகும். இங்கிலாந்தே உலகத்தின் முன் னிலையில் அவமானமடைந்து தலைகுனிந்து இந் நாட்டை விட்டுப்போக நேரும்.




மதுபானம் என்னும் பொறிக்குள் நுழைவோர் நோய், வறுமை, மரணம் என்னும் பேய்களுக்கு இரையாவார்கள் என் பதைக் காட்டும் இப்படத்தை சர்க்கார் மது விலக்குப் பிரசா ரக் கமிட்டியார் வெளியிட்டிருக்கிறார்கள்.

கருத்து நன்றாய்த்தா னிருக்கிறது. ஆனால் ஒரு கேள்வி. இவ்வளவு “தந்திரமான” பொறியை தேசமங்கும் முச்சந்திகளாகப் பார்த்து அமைத்து, லட்சக்கணக்கான வழிப்போக்கர்களின் சர்வநாசத்துக்குக் காரணமா யிருப்பவர்கள் யார்?

# சட்டசபை பழனிவாத்தியார்

[க. ச.]

ஆண்டிப்பட்டி பழனி வாத்தியார் ஆதி திராவிடர்களின் பிரதிநிதியாகச் சென்னைச் சட்டசபைக்கு நியமிக்கப் பட்டார். இதைக்கேட்டு அந்த ஜில்லா முழுவதும் அவர் பேச்சாகவே இருந்தது. ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் கந்தசாமி ரெட்டியார் நேரில் மோட்டார் வண்டியில் வந்து அவரைப் பாராட்டினார். ஜில்லா கலெக்டர் அவரைப் புகழ்ந்து கடிதம் அனுப்பினார்.

இத்தகைய அதிர்ஷ்டம் தமக்கு வருமென்று பழனி வாத்தியாரே எதிர்பார்த்தது கிடையாது. ஆனால் அவருடைய பெயர் சுற்றுப்பக்கங்களில் கொஞ்சம் பரவியிருந்தது. இரண்டு வருஷத்திற்குள் அவருடைய பள்ளிக்கூடத்தில் 100 பிள்ளைகள் சேர்ந்திருந்தார்கள். பொதுவாக அவர் யோக்கியரென்றும், புத்திசாலி யென்றும், தம் வகுப்பாருக்குள் மட்டுமன்றி எல்லாக் குடியானவர்களிடமும் நல்ல பெயர் எடுத்திருந்தார். இருந்தாலும் பட்டிக் காட்டு ஏழை உபாத்தியாயர் ஒருவரை சட்டசபைக்கு நியமிப்பார்களென யார்தான் எதிர்பார்க்கக்கூடும்? அதிலும் அவர் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் தயவைச் சம்பாதிக்க எவ்வித முயற்சியும் எடுத்துக் கொண்டதில்லை.

பின், இது எப்படி நடந்தது என்றால், ஜில்லா கலெக்டர்துரை தற்செயலாக அந்தப் பக்கம் பிரயாணம் செய்தபோது பழனி வாத்தியாரின் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டார். பழனிசாமியின் அடக்கமும், நற்குணமும், புத்திசாதுர்யமும் அவர் மனதைக்கவர்ந்தன. ஆகவே, ஆதி திராவிடர்களுக்கு அந்த ஜில்லாவிலிருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கப் போவதாய்த் தெரிந்தவுடன், பழனி சாமியைத்தான் நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.

* * * *

சட்டசபைக்குப் போய்ச் சில நாளைக்குள்ளேயே எல்லாக் கட்சியாரும் பழனி வாத்தியாரின் உதவியை எதிர்பார்ப்பதை விட்டுவிட்டனர். அவர் தமக்கு அர்த்த மாகாத வாதங்களில் தலையிடுவதில்லை; ஓட்டுக் கொடுப்பதுமில்லை. ஆதி திராவிடர்களுக்கும், பொதுவாக ஏழை எளியவர்களுக்கும் சாதகமாக யார் எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும் அதை அவர் ஆதரித்துவந்தார். நிலவரியைக் குறைக்கவேண்டுமென்ற

பிரேரணை வாதத்துக்கு வந்தபொழுது, சர்க்கார் ஆனமட்டும் பழனி வாத்தியாரைத் தங்கள் கட்சிக்கு இழுத்துக் கொள்ளப் பார்த்தார்கள். நல்ல உத்தியோகமும், செல்வாக்கும் பெறலாமென்று அவருக்கு ஆசை காட்டப் பெற்றது. ஆதி திராவிடர்களுக்கு நிலம் அதிகம் ஏது? நிலவரியைக் குறைப்பதால் அவர்களுக்கு என்ன லாபம்? அவர்களுக்காக ஏற்படும் புதிய பள்ளிக்கூடங்களுக்குப் பணமில்லாமல் போய்விடும்.—என்று என்னவெல்லாமோ சொல்லிப்பார்த்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. எந்தசாதி, வகுப்பானாலும் ஏழைகளின் கட்சியிலேயே வோட்டுக் கொடுப்பேன் என்று அவர் பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்.

சட்டசபையில் மேற்படி பிரேரணை வந்தபோது பழனி வாத்தியார் ஒரு திருத்தம் கொண்டுவந்தார். அதன் கருத்து:—"ஐந்து ஏக்கராவுக்குக் குறைந்த பட்டாக்களுக்கு நிலவரியே இருக்கக்கூடாது. இதனால் ஏற்படும் நஷ்டத்தை 50 ஏக்கராவுக்கு மேலுள்ள பட்டாக்களுக்கு அதிக வரி விதித்து ஈடுசெய்ய வேண்டும்" என்பது. இதைக்கேட்டு சர்க்கார் மட்டுமென்றி, சட்டசபை அங்கத்தினர் எல்லாருமே திடுக்கிட்டுப் போனார்கள். "இவன் புரட்சிக்காரன்" என்றார்கள் சிலர். "நல்லவன்; ஆனால் ஏதேதோ படித்துக் கெட்டுப் போனான்" என்றனர் வேறு சிலர். எல்லாரும் சேர்ந்து யோசித்து, இந்தத் திருத்தப் பிரேரணையின் மீது வோட்டு எடுக்காமலிருக்கும் பொருட்டு, அசல் தீர்மானத்தையே வாபீஸ் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள்.

* * * *

ஜுலைமீ 5வ சட்டசபையில் ஓரிடமும் காலியில்லை. அங்கத்தினர் அனைவரும் கூடியிருந்ததுடன், நடவடிக்கைகளைக் கவனிக்க அநேகர் கூடியிருந்தார்கள். ஏனென்றால் இன்றையதினம் சட்டசபையில் பூரண மதுவிலக்குத் தீர்மானம் விவாதத்துக்கு வருவதாயிருந்தது. தீர்மானம் கொண்டுவந்தவர்கள் மந்திரிக் கட்சிக்கு எதிர்க்கட்சியார். இத்தீர்மானத்தை வற்புறுத்திப் போராடும் எண்ணம் உண்மையில் அவர்களுக்கில்லை. இதைக்கொண்டுவந்து பலமாகப் பேசினால் அடுத்த தேர்தலில் தங்களுக்கு ஆதரவு அதிகம் கிடைக்குமென்று அவர்கள் எண்ணினார்கள். மந்திரிக்கட்சியாருக்கு இந்த இரகசியம் தெரியாமலில்லை. எப்படியேனும் யுக்திசெய்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்திருந்தார்கள். சர்க்காரோ இதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. புதியவரி போடவேண்டுமென்று பயமுறுத்தினால் இவர்கள் வெறுமே தீர்மானம் நிறைவேற்றிவிட்டுச் சும்மாயிருந்து விடுவார்களென்பது அவர்களுக்கு நன்றாய்த்தெரியும்.

பழனி வாத்தியாருக்கு இந்த உள் ரந்திரங்களெல்லாம் தெரிய லாயின. பொதுஜனங்களை மோசம் செய்வதற்காக ஏற்பட்ட இந்த நாடகத்தை எண்ணி அவர் மனம் புண்ணுனர். தம் சொந்த கிராமத்திலே தினந்தோறும் மாலையில் நடக்கும் துயரக்காட்சிகள் அவர் கண்முன் நின்றன. தமது இளம் பிராயத்தை நினைத்தார். தம் தந்தை பாடுபட்டு உழைத்துப்பெற்ற கூலிப்பணத்தைக் குடித்துவிட்டு வந்து தம்மையும் தமது தங்கை தம்பிகளையும் அடித்ததை நினைத்தவுடன் அவர் கண்களில் நீர் ததும்பியது. கிராமங்களில் தம் வகுப்புக் குழந்தைகள் தினம் இரண்டு வேளைக் கஞ்சி கூடக் கிடைக்காமல் வெயிலில் அலைந்து திரிந்து சப்பாத்திப் பழத்தைத் தின்று காலங்கழிப்பது பாழுங் குடியினாலல்லவா? ஏழைகளின் கொடுமைக்குக் காரணமான இந்த விஷயத்தில் கூடவா அரசியல் சூழ்ச்சியும், கட்சிதந்திரமும்? இவ்வாறு வெகுநேரம் சிந்தித்து அவர் அரசாங்கத்துக்குச் சில கேள்விகள் அனுப்பியிருந்தார்.

சட்டசபை 11 மணிக்குக் கூடிற்று. கலால் மந்திரி எழுந்திருந்து பழனிவாத்தியாரின் கேள்விகளுக்குப் பதில் சொன்னார்.

கேள்வி :— சென்னை மாகாணத்தில் 'தாழ்ந்த' வகுப்பாரின் குடும்பங்கள் எத்தனை?

பதில் :— சுமார் பத்து லட்சம்.

கேள்வி :— மொத்தம் குடும்பங்கள் எத்தனை?

பதில் :— சுமார் ஒரு கோடி.

கேள்வி :—குடியினால் சர்க்காருக்கு மொத்த வருமானம் எவ்வளவு?

பதில் :— 5½ கோடிரூபாய்.

கேள்வி :— சர்க்காருக்கு 5½ கோடிரூபாய் வந்தால் ஜனங்கள் குடியில் எவ்வளவு ரூபாய் செலவு செய்திருக்கவேண்டும்?

பதில் :—சொல்ல முடியாது. இதற்காகத் தனி விசாரணைக் கமிஷன் வைத்தால் தான் கண்டு பிடிக்கலாம்.

கேள்வி :— சர்க்காருக்குக் கிடைக்கும் கலால் வருமானத்தில் எத்தனை பங்கு 'தாழ்ந்த' வகுப்பார் கொடுக்கிறார்கள்?

பதில் :—ஜனத்தொகை வீதாசாரப்படி 55 லட்சம் கொடுப்பதாக ஏற்படும்.

கேள்வி :— மொத்தத்தில் 'தாழ்ந்த' வகுப்பார் வருஷந்தோறும் எவ்வளவு பணம் குடியில் செலவு செய்கிறார்கள்?

பதில் :— தெரியாது.

கேள்வி :— தாழ்ந்தவகுப்பாரின் முன்னேற்றத்துக்காகப் பிரத்யேகமாய் சர்க்கார் எவ்வளவு ரூபாய் செலவு செய்கிறார்கள் ?

பதில் :— சென்ற வருஷம் இரண்டரை லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இவ்வருஷத்தில் இன்னும் முக்கால் லட்சம் அதிகம் செய்ய உத்தேசம். (சர்க்கார் பிரதிநிதிகளின் கரகோஷம்).

* * * *

கேள்விகளுக்குப் பதில் சொல்லியானதும் "இம்மாகாணத்தில் பூரண மதுவிலக்குச் சட்டம் உடனே செய்யவேண்டும்" என்னும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதை ஆதரித்துப் பலர் நீண்ட பிரசங்கம் செய்தார்கள். மந்திரிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் எழுந்து "25 வருஷங்களில் படிப்படியாக மதுவை ஒழித்துவிடவேண்டும்" என்று திருத்தப்பிரேரணை கொண்டுவந்தார். இதை மற்றும் சிலர் ஆதரித்தார்கள். இதைப்பற்றி அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்னவென்று அசல் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் கேட்டார். அப்போது நிர்வாகசபை அங்கத்தவர் பீடர்சன்துரை எழுந்து சொன்னதாவது :—

"இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிப்பதற்கில்லை. ஏழைகளின் கஷ்டம் அறியாமல் இந்தப் பிரேரணை கொண்டுவந்திருக்கிறார்கள். நாள் முழுதும் உழைத்துப் பாடுபடும் ஏழைக் குடியானவர்களுக்கும், கூலிக்காரர்களுக்கும் கொஞ்சம் மதுபானம் மிகவும் அவசியம். ஆனால் திருத்தப் பிரேரணையை அங்கத்தினர் எல்லாரும் ஏகமனதாய் ஒப்புக் கொள்வதாயிருந்தால் நாங்கள் எதிர்க்காமலிருக்கிறோம். வோட்டுக்கு விடுவதாயிருந்தால் தீர்மானம், திருத்தம் இரண்டையும் எதிர்த்தே தீருவோம்."

பின்னர் கலால் மந்திரி எழுந்து திருத்தப் பிரேரணையை எல்லாரும் ஏகமனதாய் ஒப்புக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். எந்த ஊரிலாவது கள்ளுக்கடை ஏலம் போகாவிட்டால் அந்த ஊரில் கடையை மூடிவிடுவதாக அவர் வாக்குறுதி அளித்தார். கலால் கமிஷனரும் இதை ஒப்புக்கொண்டார். இதனால் அரசாங்க வருமானத்துக்குப் பாதகம் எதுவும் விளையாதென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். பணத்தாசை பிடித்த ஒருவர் இருவராவது எந்த ஊரிலும் இருந்துதான் தீருவார்களென்றும், அப்படியேயில்லாவிட்டாலும் கலால் இலாகா சிப்பந்திகள் பக்கத்து ஊர்களிலிருந்தாவது ஏலம் கேட்க ஆசாமிகள் பிடித்துவந்து விடுவார்களென்றும் அவருக்கு நிச்சயமிருந்தது.

ஆனால் கலால் மந்திரியின் இந்தப் பெரிய வாக்குறுதியைக் கேட்டு அங்கத்தினர் எல்லாரும் மகிழ்ந்து போனார்கள். தீர்மானத்தைக் கொண்டு வந்தவரே திருத்தத்தை ஒப்புக் கொள்ளச் சம்மதித்தார். யாரும் இதை எதிர்பாரில்லை. இத்தருணத்தில் பழனி வாத்தியார் எழுந்து துயரத்துடன் பேசியதாவது :—

"நான் சட்ட சபைக்கு வரும்போது என்னுடைய வகுப்பாருக்கு ஏதோ நன்மை செய்யலாமென்ற ஆசையுடன் வந்தேன். அந்த ஆசை

வீணாசை என்று இப்போது தெரியவருகிறது. என்னுடைய கேள்விகளையும் அதற்குக் கனம் கலால் மந்திரி கூறிய பதில்களையும் சிறிது கவனித்துப் பாருங்கள். சில கேள்விகளுக்கு 'தெரியாது' 'தகவல் இல்லை' என்று பதில் சொல்லியிருந்த போதிலும் நாமே ஊகித்தறியலாம். இம் மாகாணத்திலே $5\frac{1}{2}$ கோடி ரூபாய் கலால் வருமானம் சர்க்காருக்கு மட்டும் கிடைக்கிறது. அப்படியானால் ஜனங்கள் குறைந்தது இதற்கு மூன்று மடங்கு அதாவது $16\frac{1}{2}$ கோடி ரூபாயாவது குடியில் தொலைக்கவேண்டும். இந்தப் பெரிய தொகையிலே 'தாழ்ந்த' வகுப்பாரின் பங்கு எவ்வளவு? வீதாசாரப்படி பார்த்தால் 1 கோடி 65 லக்ஷம் ரூபாய். அதாவது குடும்பம் ஒன்றுக்கு சராசரியில் $16\frac{1}{2}$ ரூபாய் தொலைகிறது. ஆனால் சென்னை மாகாணத்திலுள்ள 40 லக்ஷம் முகம்மதியர்கள் அநேகமாய்க் குடிப்பதில்லை. ஹிந்துக்களிலும் பிராமணர், வைசியர், வேளாளர் முதலியோரில் பெரும்பான்மையோர் குடிப்பது கிடையாது. இவர்களுடைய வீதாசாரமெல்லாம் ஏழைகளான என் வகுப்பார் தலையிலேயே சேரும். ஆகவே என்னுடைய வகுப்பார் குடியில் செலவழிப்பது வருஷத்தில் 3 கோடி ரூபாய்க்குக் குறையாது. குடி தொலைந்தால் இவ்வளவு பணமும் வருஷாவருஷம் அவர்களுக்கு மீதியாகும். இப்படிச் செய்யாமல் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டு, வருஷத்தில் இரண்டொரு லட்சம் ரூபாய் செலவழித்து விட்டுத் தாழ்ந்த வகுப்பாருக்கு ஏதோ பெரிய சகாயம் செய்துவிட்டதாய் வேஷம் போடுகிறீர்கள். இந்த நாடகத்தைப் பார்த்து என் மனம் புண்ணாகிவிட்டது. உங்களெல்லாரையும் ஒன்று கேட்டுவிட்டு உட்காருகிறேன். 'தாழ்ந்த' வகுப்பாரை ஒரேயடியில் கைதூக்கி விடக்கூடிய திட்டம், மதுவிலக்கைப் போல் வேறொன்று இருப்பதாக நீங்கள் சொல்ல முடியுமா? அடுத்த ஐம்பது வருஷத்தில் எங்களுக்கு இவ்வளவு லாபம் தரக்கூடிய வேறொரு திட்டத்தை நீங்கள் குறிப்பிட முடியுமா?"

இப்படிப் பேசிவிட்டுப் பழனி வாத்தியார் உட்கார்ந்தார். அப்புறம் யாரும் பேசவில்லை. திருத்தப் பிரேரணையை வோட்டுக்கு விட்டதில் பழனி வாத்தியாரைத் தவிர மற்ற அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது.

* * * *

அன்றிரவு பழனி வாத்தியாரைக் கவர்னர் துரை கூப்பிட்டனுப்பினார். "உம்மிடம் சர்க்காருக்கு நம்பிக்கை இல்லை. அரசாங்கத்தையே கவிழ்க்கக் கூடிய முறையில் இறங்கியிருக்கிறீர். கொஞ்சமும் நன்றியில்லாமலும் பேசி யிருக்கிறீர்" என்று கூறினார். பழனி வாத்தியார் ஒன்றும் பதில் பேசாமல் கையில் தயாராய் எழுதி எடுத்துக்கொண்டு போன ராஜீனாமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வெளி யேறினார். ஆண்டிப்பட்டிக்குத் திரும்பிச் சென்று பழையபடி பள்ளிக்கூட உபாத்தியாய ரானார். ஏழைகளுக்குச் சட்ட சபை என்ன செய்யும்?

# முழு மோசம்

“பிரசாரகர்கள் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டால் சர்க்கார் குறுக்கிட்டு அவர்கள் வேலையை நிறுத்தி விடலாம் அல்லது தடை செய்யலாம். அப்படிச் செய்தால் சர்க்கார் பிரசாரம் வெறும் ஏமாற்றம் என்பது தெளிவாய் விளங்கும்” என்று மாசி இதழில் எழுதி யிருந்தோம். இவ்விஷயம் இப்பொழுது சிறிதும் சந்தேகமின்றி விளங்கி விட்டது.

சர்க்கார் பிரசாரகர்கள் சிலர் உண்மையாக உழைக்கத் தீர்மானித்து “குடிக்க வேண்டாம்” என்று ஜனங்களிடையே பிரசாரம் செய்த துடன், “கடை யெடுத்து நஷ்டமடைய வேண்டாம்” என்று குத்தகைக் காரர்களுக்கும் எச்சரிக்கை செய்தார்கள். இதன்பயனாகச் சில இடங்களில் கடைகள் ஏலம் போகவில்லை யென்றும், வேறு சில இடங்களில் ஏலத் தொகை குறைந்து விட்டதென்றும் சர்க்காருக்குத் தகவல் வந்தது. உடனே “பிரசாரகர்கள் கடை ஏலங்களில் தலையிடக் கூடாது” என்று உத்திரவு பிறந்தது.

ஆனால் சர்க்கார் இதை இத்துடன் விட்டு விடவில்லை. ஐந்து லட் சம் ரூபாய் செலவில் நடத்தும் பிரசாரம் முழுதும் பயனின்றிப் போவ தற்கு என்னென்ன வழியுண்டோ அவ்வளவும் கையாண்டு வருகிறார்கள்.

தர்மபுரி தாலூகா தாசில்தார் அத்தாலூகா கிராமாதிகாரிகளுக்கு விடுத்த அறிக்கை யொன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. பிழை கள் உள்பட அவ்வுத்திரவை அப்படியே கீழே தருகிறோம்:—

D No 1,241—30

“தர்மபுரி தாலூக்கா தாசில்தார் அவர்கள் எல்லா கிராமாதிகாரி களுக்கும் தெரியப்படுத்துகிறது.

மதுப்பான கடைக்குள் ஒன்றும் வாங்கி சாப்பிடாமல் யாதொரு நபர் வந்தால் அப்பேர்பட்டவர்களை கடைக்கீரரர்கள் இஷ்டப்பட் டால் கடைக்கு வெளியில் போகச் சொல்லலாம். மதுபானம் குடிக்கக் கூடாதென்று ப்ரசாறம் செய்பவர்கள் சர்க்கார் மனிதர் களும் அல்ல. சர்க்காரால் நியமிக்கப் பட்டவர்களுமல்ல. அன் னிய மனிதர்கள். இந்த சங்கதிகளை கிராமத்தில் தண்ரோ மூலிய மாய் பிரசித்தம் செய்து பயரங்கமான இடத்தில் ஒட்டவேண் டியது.”

இதேமாதிரியான உத்திரவு எல்லாத் தாலூகாக்களிலும் தாசில்தார்கள் பிறப்பித்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு இரண்டு வாயினால் பேசும் அரசாங்கத்தைக் குறித்து நாம் என்ன வென்று சொல்வது? ஒரு புறத்தில் சட்டசபையில் "எங்களுக்கு மதுவிலக்கில் சிரத்தையில்லையா? பாருங்கள், ஐந்துலட்சம் ரூபாய் செலவு செய்து பிரசாரம் செய்கிறோம். தேசத்தை மதுவிலக்குக்குத் தயார் செய்கிறோம்" என்று சொல்கிறார்கள். மற்றொருபுறத்தில் "மதுவிலக்குப் பிரசாரம் செய்பவர்கள் சர்க்கார் மனிதர்களல்ல. சர்க்காரால் நியமிக்கப் பட்டவர்களுமல்ல. அன்னிய மனிதர்கள்" என்று உத்திரவு பிறப்பிக்கிறார்கள்.

இந்த அற்புதமான உத்திரவை "கிராமத்தில் தண்டோரா மூலியமாய் பிரசித்தம் செய்து பயரங்கமான இடத்தில் ஒட்டுவதின்" பலன் என்ன ஆகுமென்று சொல்ல வேண்டிய தில்லை. மதுவிலக்குப் பிரசாரகர்களுக்குத் தொந்திரவு கொடுக்கும்படி கள்ளுக்கடைக் குத்தகைதாரர்களைத் தூண்டுவதேயாகும். மற்றொரு சர்க்கார் உத்திரவைப் பாருங்கள்:—

> "கலால் கமிஷனர் ரிவினியூபோர்டாருடன் கலந்து அபிப்பிராயப் படுவது என்னவென்றால், ஜில்லா மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியின் முயற்சிகளில் கிராமஉத்தியோகஸ்தர்கள் ஒத்துழைப்பது அவசிய மில்லை, உசிதமுமன்று. இதற்கு மாறாக, பிரசாரக் கமிட்டியார் மிதமாகக் குடித்தல், குடியை நிறுத்தல், இவைகளுக்குச் சாதகமாக பொது ஜன அபிப்பிராயம் உண்டுபண்ணுதல் முதலிய நியாயமான வேலைகளைச் செய்துவரும் வரையில் கிராமாதிகாரிகள் அவர்களுடைய காரியங்களுக்குத் தடைசெய்தல் அவசியமில்லை. கள்ளுக்கடை மறியல் செய்வதும், கள்ளுக்கடை ஏலத்தில் தலையிட்டுத் தடைசெய்வதும் கமிட்டியின் வேலைகளல்ல என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்."

சர்க்கார் பிரசாரம் முழுமோசமே என்பதற்கு இந்த உத்திரவைக் காட்டிலும் வேறு அத்தாட்சி வேண்டியதில்லை. ஜனங்கள் குடித்துக் கெட்டுப் போகக் கூடாது என்னும் கருணையினால் உண்மையில் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் பட்சத்தில், "கிராம உத்தியோகஸ்தர்கள் அந்தப் பிரசாரத்தில் ஒத்துழைப்பது அவசியமில்லை, உசிதமு மன்று" என என் உத்திரவு போட வேண்டும்? இதுமட்டு மல்ல; கமிட்டியார் நியாயமான வேலைகளைச் செய்து வரும் வரையில் அவர்கள் வேலைக்குத் தடைசெய்ய வேண்டாமாம்! "தடைசெய்ய அதிகாரமுண்டு; ஆனால் போனால் போகிறது, வேண்டாம்" என்று தயவு கூர்ந்து தெரிவிக்கப்

படுகிறது! பிரசாரம் பலன் கொடாமலிருக்க கிராம உத்தியோகஸ்தர்கள் ஒத்துழையாம லிருந்தாலே போதும் என்பது கருத்து.

இத்தகைய மோசமான உத்திரவுகளுக்குக் கலால் மந்திரியும் உடந்தைதானா? அவருடைய பிரசார திட்டம் கொஞ்சமேனும் பலன் தரவேண்டுமானால் இந்த உத்திரவுகளை ரத்து செய்வதற்கு அவர் உடனே முயற்சி எடுக்க வேண்டும்.

பிரசாரக் கமிட்டிகளும், பிரசாரகர்களும் என்ன செய்யப் போகிறார்கள்? இந்த மோசத்துக்கு அவர்களும் உடன்படப் போகிறார்களா? தாங்கள் செய்யும் வேலை யெல்லாம் பயனின்றிப் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களா?

---




இது, சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியார் வெளியிட்டிருக்கும் சுவர் விளம்பரங்களில் ஒன்று. "இடப்புறத்திலுள்ள கள்ளுக்கடைக்குப் போனால் வலப்புறத்தில் காணும் கதியை யடைவீர்கள்" என்பது ஆங்கிலத்தில் எழுதி யிருப்பதின் கருத்து.

ஜனங்கள் வலப்பக்கத்தில் காணும் கதியை அடையக்கூடாதென்று சர்க்கார் உண்மையாகக் கருதும் பட்சத்தில், இடப்பக்கத்தில் உள்ள அவர்களுடைய கடையையே ஒழித்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? முதல் பக்கத்தில் போட்டிருக்கும் நமது படத்தை இப்போது பாருங்கள்.


கலால்

# டாம்பீக யாத்திரை

எதிர்ப் பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள். வண்டி பார்ப்பதற்கு அழகாய்த் தானிருக்கிறது. வண்டிக்குள் இருப்ப வர்களும் மகா பெரிய மனிதர்கள் தான். ஆனால் இவர்களை வண்டி தாங்குமா? வண்டியை யிழுக்கும் பிராணிகளைப் பாருங்கள். ஒரு பக்கம் கழுதை. அது இனிமேல் இழுக்கமாட்டேனென்று காலை வாரி உதைக்கிறது. மற்றொன்று வெறும் கண்ணாடிப் புட்டி. இன்றோ, நாளையோ அது உடைந்து நொறுங்கப்போவது நிச்ச யம். வண்டி இன்னும் எத்தனை காலம் ஓடும்?............

சென்னை அரசாங்கத்தின் நிலைமை இப்படித்தான் இருக்கிற தென்று சமீபத்தில் ஸர் தாமஸ் மாயர் தெரிவித்தார். நிலத்தீர் வையை இனிமேல் உயர்த்துவதற்கு இடமில்லை. இதற்குமேல் பாரம் சுமக்கமாட்டோ மென்று குடியானவர்கள் சொல்கிறார்கள். கலால் வருமானமோ அடியோடு போய்விடப் போகிறது. பூரண மதுவிலக்குச் செய்தே தீரவேண்டுமென்று எல்லாரும் ஒப்புக் கொண்டு விட்டார்கள். இந்த இலட்சணத்தில், புதிய அரசியல் சீர்திருத்தங்களும், புதிய செலவுகளும் ஏற்படப் போகின்றன. அவைகளையும் வண்டியில் ஏற்றியாக வேண்டும். போகும் வழி யென்ன? ஆகையால் புதிய வரிகளைக் கண்டு பிடியுங்கள்.—என்று சொல்கிறார் மாயர் துரை.

ஆனால், ஜனங்கள் சொல்வது என்ன வென்றால்:—அதெல்லாம் முடியாது. புதிய வரி போட இடமில்லை. உங்கள் டாம்பீக யாத் திரை போதும், நிறுத்துங்கள். ஏழை நாட்டின் சர்க்கார், ஏழை மக்களுக்குத் தகுந்தபடி தான் இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான சம்பளமும், அழகான மாளிகைகளும், மற்ற ஆடம்பரச் செலவு களும் இந்த ஏழை நாட்டுக்குப் பொருந்தமாட்டா. வண்டியி லுள்ள டம்பாச்சாரிகளையும், அவர்களுடைய படாடோப சாமான் களையும் வண்டியை விட்டு இறக்குங்கள். ஒற்றை மாடு பூட்டிய வண்டியில் ஆடம்பரமில்லாத பிரயாணமே எங்களுக்குப் போதும். கலால் வருமானத்துக்கு ஈடுசெய்ய அரசாங்கச் செலவைக் குறைப்பதுதான் வழி.— என்பதே.

# விமோசனத் திருநாள்

[ரா. கி.]

திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம் தாலூகாக்களில் 27 கள்ளு சாராயக் கடைகளை மூடிவிடக் கலால் கமிஷனர் உத்திரவிட் டிருப்பது குறித்து முன்னமே அறிவித் திருக்கிறோம். நாளது எப்ரல்மீ 1உ இந்த உத்திரவு அமுலுக்கு வந்து குறிப்பிட்ட கடைகள் எல்லாம் மூடப் பெற்றன.

காந்தி ஆசிரமத்தைச் சுற்றியுள்ள பெரிய கிராமங்கள் எல்லா வற்றிலும் கடைகள் மூடப்பெற்ற தினத்தை, கள்ளரக்கனை ஒழித்த விமோசனத் திருநாளாக ஜனங்கள் கொண்டாடினார்கள். கிராமக் கோயில்களில் விசேஷ ஆராதனையும், பஜனை, ஊர்வலம், பொதுக் கூட்டம் முதலியவைகளும் நடைபெற்றன. காந்தி ஆசிரமத் தொண்டர்கள் அன்று மூன்று தனித்தனிக் கூட்டமாகப் பிரிந்து முக்கியமான கிராமங்கள் எல்லாவற்றிற்கும் சென்று மேற்படி கொண்டாட்டத்தை நடத்த உதவி செய்தார்கள்.

தொண்டர்கள் சென்றிருந்த கிராமங்கள் :—சித்தாலந்தூர், கந்தம் பாளையம், மணியனூர், மோழிப்பள்ளி, உஞ்சனை, குமாரமங்கலம், திருச்செங்கோடு.

மூடப் பெற்ற கடைகளுக்குள் மிகப் பெரியவை திருச் செங்கோட்டிலிருந்த இரண்டு கள்ளுக் கடைகளும், ஒரு சாராயக் கடையுமேயாகும். அன்றுமாலை திருச் செங்கோட்டில் நமது ஆசிரியர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் இரண்டு பெரிய கூட்டங்கள் நடை பெற்றன.

கடை மூடிய தினம் செவ்வாய்க் கிழமை யாதலால், அன்று திருச் செங்கோட்டில் வழக்கம்போல் பெரிய வாரச் சந்தை கூடியது. சுற்று வட்டத்தில் பல கிராமங்களிலிருந்து வந்துகூடும் ஜனங்களில் பலர் சந்தையிலிருந்து திரும்பும்போது கள்ளுக் கடையில் நுழைந்து விட்டுப் போவது வழக்கம். அன்றைய தினம் கடையில்லாமற் போகவே அவர்கள் எல்லாரும் கையில் காசுடன் வீடு திரும்பினார்கள்.

“கடை மூடியாயிற்று, கடை மூடியாயிற்று” என்ற பேச்சே அன்று எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள். சுமார் பத்து வருஷ காலமாய்ப் பேச்சிலிருந்துவந்த விஷயம் இப்போது காரியத்தில்

நடந்துவிட்டது குறித்து மகிழ்ச்சி யடையாதவர்கள் இல்லை. முக்கிய மாக, பெண் மக்கள் இது குறித்துக் காட்டிய சந்தோஷத்தை அளவிட முடியாது.

"ஆனால் பக்கத்து ஊர்க் கடைகளை மட்டும் ஏன் வைத்திருக் கிறார்கள்? அங்கே போய்க் குடித்துவிடுவார்களே?" என்றும் சிலர் கேட்டார்கள்.

கடைமூடிய பிரதேசம் மிகவும் சிறிதாயிருப்பது தான் பெரிய குறைபாடாகும். உதாரணமாக, திருச் செங்கோட்டுக்கு இரண்டு மைல் தூரத்துக்குள் ஆண்டிப் பாளையத்தில் ஒரு கடையும், நாராயண பாளை யத்தில் ஒரு கடையும் எடுபடாம லிருக்கின்றன. அதிலும் நாராயண பாளையத்துக் கடை ஏராளமான ஜனப்போக்கு வரவுள்ள திருச்செங் கோடு—சங்கரிதுர்க்கம் சாலையிலேயே இருந்து வருகிறது.

சமீபத்தில் கடைகள் இருப்பதிலுள்ள அபாயம், பழைய குடிகாரர்கள் அவைகளைத் தேடிக் குடிக்கப் போவார்கள் என்பது மட்டுமன்று. மூடப் பெற்ற கடைகளை ஏற்கனவே குத்தகை எடுத்திருந்தவர்களில் சிலர், இப்போது பக்கத்து கிராமங்களிலுள்ள கடைகளின் குத்தகைதாரர்களா யிருப்பதால் அவர்களாலும் தொல்லை விளையக் கூடும்.

ஐந்து லட்சம் ரூபாய்ப் பிரசாரம் வீணாகும் பொருட்டு, சர்க்கார் சமீபத்தில் தண்டோரா போட்டுப் பிரசித்தம் செய்த உத்திரவுகள் குத் தகை தாரர்களுக்குக் கொஞ்சம் தூபம் போட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இதற்கு ஓர் உதாரணம் இங்கே குறிப்பிடுகிறோம்.

கடைமூடிய தினத்துக்கு முந்தைய வாரத்தில், காந்தி ஆசிரமத் தொண்டர்கள் மேற்கூறிய கிராமங்களுக் கெல்லாம் சென்று மதுவிலக் குப் படங்கள் காட்டித் தீவிர பிரசாரம் செய்துவந்தார்கள். அநேகமாக ஊரிலுள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் இக் கூட்டங்களுக்கு வந்து படங்களைப் பார்த்ததுடன், தொண்டர்கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் மிக்க ஆவலுடன் கேட்டார்கள். ஆனால் ஒரு கிராமத் தில் நடந்த கூட்டத்தில் மட்டும் தடை உண்டாயிற்று.

தடை உண்டு பண்ணியவர் மூடவிருந்த கடைகளில் ஒன்றின் குத் தகைதாரர். தற்போது மூடாமலிருக்கும் பக்கத்து ஊர்க்கடை ஒன்றை யும் அவர் குத்தகை எடுத்திருக்கிறார். இவர் இரண்டு குடிகாரர்களுடன் அக் கூட்டத்திற்கு வந்து இடையிடையே பேசித் தடைசெய்து வந்தார்.

அத்துடன் நில்லாமல் "உங்களால் என்ன முடியும்? இந்த ஊரில் நான் கள்ளு விற்காமல் விட்டுவிடப் போகிறேனா? உங்களால் ஆன தைப் பாருங்கள்" என்றும் வீறாப்புப் பேசினார்.

கூட்டத்தி லிருந்தவர்கள் அவ்வளவு பேரும், "இந்தப் பாவி என் இப்படித் தடை செய்கிறான்? படம் பார்க்கமுடியாமலும், சொல்வதைக் கேட்கமுடியாமலும் செய்கிறானே?" என்று சபித்தார்கள். தொண்டர்கள் அநுமதி கொடுத்திருந்தால் அவரைப் பலவந்தமாக அப்புறப் படுத்தியிருப்பார்கள். ஆனால் தொண்டர்கள் அதற்கிடங் கொடுக்கவில்லை. நல்ல வார்த்தையால் அவரை சமாதானப் படுத்தவே முயன்றார்கள். மறுநாள் அதே இடத்தில் இன்னும் பெரிய கூட்டம் நடந்தது. குத்தகைதாரர் அன்று வரவில்லை.

இந்தக் குத்தகைக்காரர் போன்றவர்களையும் வசப்படுத்த வேண்டுமென்பது தான் நமது நோக்கமாகும். உண்மையில் இவர்கள்மீது குற்றமும் அதிகமில்லை. கைலாபம் போவதாயிருந்தால் எவருக்கும் ஆத்திரம் வருவது சகஜமே யல்லவா? பொது நன்மைக்காக சொந்த லாபத்தைத் துறக்கும் தியாக உணர்ச்சி எல்லாருக்குமே எளிதில் வந்து விடுமா?

குற்றம் இவர்கள் மீதில்லை. இத்தகைய அநியாய வியாபாரம் ஒன்றை உண்டாக்கி அதில் லாபம் சம்பாதிக்கும் ஆசையை வளர்த்தவர்கள் யார்? போட்டிபோட்டு ஏலத்தொகையை உயர்த்திக் குத்தகை எடுக்கும்படி தூண்டுபவர்கள் யார்? "மதுவிலக்குப் பிரசாரகர்கள் சர்க்கார் மனிதர்களல்ல. அவர்களுக்குக் கிராம உத்தியோகஸ்தர்கள் உதவிசெய்யக்கூடாது. கள்ளுக் கடைக்காரர்கள் அவர்களை வெளியே போகச் சொல்லலாம்!" என்று உத்திரவு போட்டு தைரியங் கொடுப்பவர்கள் யார்? குற்றம் அவர்களுடையதே யாகும்.

கள்ளரக்கனை தேசத்திலிருந்து அடியோடு ஒழித்து விடுவதுதான் இவைகளுக் கெல்லாம் தக்க பரிகாரம். நாடெங்கும் "விமோசனத் திருவிழா" கொண்டாடும் நன்னாளை விரைவில் எதிர்பார்ப் போமாக.

---

ஆஸ்திரேலிய மதுவிலக்கு மகா சபையின் காரியதரிசி, இந்திய மதுவிலக்கு சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கூறி யிருப்பதாவது:—

"பொதுவாக இந்தியா தேசத்தின் நிலைமையைக் குறித்து நாங்கள் பெரிதும் சிரத்தை கொண்டிருக்கிறோம். இந்திய மகா ஜனங்கள் தங்கள் நாட்டிலிருந்து மது வியாபாரத்தைத் தொலைத்து விமோசனம் அடைவதற்காக நடத்திவரும் தீவிர முயற்சிகளை அறிந்து அளவில்லாத சந்தோஷம் அடைகிறோம். உங்களுடைய முயற்சிகளைப் பெரிதும் எதிர்த்துத் தடை செய்பவர்கள் ஏகாதிபத்திய அரசாங்கத்தாரே என்னும் விஷயம் எங்களுக்கு மிக்க ஏமாற்றமும், மனவருத்தமும் அளிக்கின்றது. உங்கள் முயற்சிகளை நாங்கள் ஆவலுடன் கவனித்து வருவதுடன், அவை வெற்றிபெற வேண்டுமென்றும் மனப் பூர்வமாக விரும்புகிறோம்."

# பெரிய தடை

நமது நாட்டில் எந்த நல்ல இயக்கமும் வெற்றி யடைவதற்குப் பெரிய தடையா யிருப்பது எது? அசட்டையே யாகும். விரோதிகளை வசப்படுத்திக் கொள்ளலாம்; அல்லது வென்று விடலாம். ஆனால் அசிரத்தையா யிருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது.

மற்ற நாடுகளில் மதுவிலக்கைத் தீவிரமாய் ஆதரிப்போர் இருக்கிறார்கள்; பலமான விரோதிகளும் இருக்கிறார்கள். நமது தேசத்திலோ அநேகமாய் விரோதிகளே இல்லை. எல்லாரும் மது விலக்கை ஆதரிப்பவர்கள் தான். ஆனால் அதற்காக முயற்சி எதுவும் எடுக்கமாட்டார்கள்.

நமது தேசத்தில் 'உயர்வகுப்பார்' எனப் படுவோரிடமும், படித்த வகுப்பாரிடமும் குடி அதிகம் பரவாமலிருப்பது ஒரு விதத்தில் அநுகூலமாயினும், மற்றொரு விதத்தில் பெரிய பிரதி கூலமாகும். எந்த இயக்கமானாலும் சமூகத்தில் செல்வாக் குள்ளவர்கள், படித்தவர்கள் முன்னின்று உழைத்தால் வெற்றி விரைவில் கிடைக்கும். ஆனால் மதுபானத் தீமை தங்களைப் பாதிப்பதல்ல வாகையால் இவர்களிடையே இவ்விஷயத்தில் அசிரத்தை குடிகொண் டிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர், மந்திரிகள், மற்றும் பொது ஜனத்தலைவர்கள் எல்லாரும் பேச்சளவில் அநுதாபங் காட்டிக் காரியத்தில் ஒன்றும் செய்யாம லிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

இந்த அசிரத்தையைத் தொலைக்கவேண்டும். நாட்டில் ஏழை எளியவர்களுக்கு வருந்துன்பம் நமக்கு வந்ததாக பாவிக்கும் உயர் குணம் வேண்டும். மேலும் இப்படியே அசிரத்தை காட்டி வந்தால் நாளடைவில் இந்தப் பெருந்தீமை படித்தவர்கள், உயர் வகுப்பாரிடமும் பரவாமல் போகாது. இப்பொழுதே இதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. வெள்ளம் வருவதற்கு முன் அணைகோலுவதே அறிவுடைமை யாகும்.

# பர்மாவில் மதுபானம்

"பாரத நாட்டில் ஆதிகாலத்திலிருந்தே மதுபானம் இருந்து வந்தது; பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதைப் புதிதாகக்கொண்டு வந்து புகுத்தவில்லை" என்று சிலர் சொல்லுகிறார்கள். இதற்கு நாம் கூறும் பதில் யாதென்றால், ஜனங்களை அழிக்கும் ஒரு பெரிய தீமையை வைத்திருப்பதற்கு அது பழமையானது என்று சொல்வது சரியான சமாதானமாகாது. மேலும் பிரிட்டிஷார் புதிதாக இத்தீமையைக் கொண்டுவராதது உண்மையாயிருக்கலாம். ஆனால் அவர்கள் ஆட்சியில் முன்னைப் போதையும் விடக் குடி பெருகி யிருக்கிறது; முன்னெப்போது மில்லாத கௌரவம் அதற்கு ஏற்பட்டிருக்கிறது; முன் எக்காலத்திலும் ஏழை எளியவர்கள் குடியில் இவ்வளவு பணம் தொலைத்ததில்லை என்பதே.

பர்மா நாட்டைப் பொறுத்தவரையில் மேற் சொன்னது போன்ற போலி சமாதானம் சொல்வதற்கும் இடமில்லை. பர்மாவில் பிரிட்டிஷாருடன் கூடவே புட்டியும் புகுந்தது என்பதற்குப் பல ஆங்கிலேயரே அத்தாட்சி கூறுகிறார்கள்.

பர்மா தேசத்தின் விஸ்தீரணம் 230839 சதுர மைல். 1921-ம் வருஷத்து ஜனக்கணிதியின்படி ஜனத்தொகை 13,205,564. இந்நாடு முழுமையும் 1886-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது.

இந்நாட்டின் சுதேசிகளான பர்மியர் அனைவரும் புத்தமதத்தைத் தழுவியவர்கள். புத்த சமயம் மதுபானத்தை மிகப் பெரிய பாவமாகக் கருதிக் கண்டிக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. எனவே இந்நாட்டார் அநேகமாய் மதுபானம் என்பதையே அறியாதிருந்தார்கள் என்று சொல்லலாம். ஒரு வேளை குடி இருந்திருந்தாலும் எங்கேயோ மிக அபூர்வமாகவே இருந்திருத்தல் வேண்டும். இதை மிஸ்டர் கெயின் என்பவரின் வாய்மொழியினால் நன்கு அறிகிறோம்.

இவ்வாங்கிலேயர் பர்மாவில் ஆங்கில ஆட்சி பூரணமாய் நிலைபெற்றுப் பதினேரு ஆண்டுகளுக்குப் பின்னால், 1897-ம் வருஷத்தில், பர்மாவுக்குச் சென்றார். அவர் நேரில் பார்த்துச் சொல்வதாவது:—

"இந்தியா தேசத்திலேயே பர்மியர் தான் எல்லாரையும் விட மதுபானத்தை அதிகம் வெறுப்பவர்கள் என்பதை நான் காண்கிறேன். பர்மாவில் ஐரோப்பியர்களும், சீனர்களும் மட்டும் இல்லாவிட்டால் இம் மாகா

ணத்திலுள்ள மதுபானக் கடை, அபின் கடை எல்லாவற்றையும் எவ்வித ஆட்சேபமுமின்றி உடனே மூடிவிடலாம். இதற்கு விரோதமாய் பர்மியர் ஒரு வார்த்தையும் சொல்லமாட்டார்கள். ஆனால் இங்குள்ள ஆங்கிலேயரிடத்தும், பொதுவாக எல்லா ஐரோப்பியரிடத்தும் மதுபானம் பயங்கரமாகப் பெருகி யிருக்கிறது."

மாண்டலே நகரில் இருந்த ரெவரண்ட் வின்ஸ்டன் என்னும் பாதிரியார் 1892-ம் வருஷத்தில் பின் வருமாறு எழுதினர் :—

"பர்மிய மன்னனின் ஆட்சி மிகவும் சீர் கெட்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. அந்த ஆட்சியில் லஞ்சமும் அநீதியும் அதிகமாயிருந்தன. அவ்வாட்சி திறமையற்று பலவீன மடைந்திருந்தது. வருமானமில்லாமல் அது தத்தளித்தது. இப்படி யெல்லா மிருந்தபோதிலும், மதுபானத்துக்கு லைஸென்ஸ் கொடுத்துப் பணம் சேர்க்கும்படி அவ்வாட்சி அவ்வளவு இழிவடைந்திருக்கவில்லை."

இவ்வளவு இழிவான பணஞ்சேர்க்கும் முறை பிரிட்டிஷ் ஆட்சியிலே தான் கைக்கொள்ளப்பெற்றது என்று மேற்படி பாதிரியார் சுட்டிக் காட்டினர்.

பர்மியர் மதுபானத்தை எவ்வளவு தூரம் வெறுத்தார்கள் என்பதற்கு மற்றோர் அத்தாட்சி எடுத்துக் காட்டுவோம். மேல் பர்மா 1886-ல் ஆங்கில ஆட்சியின் கீழ் வந்தது. உடனே அங்கு சாராயக் கடைகள் ஏலம் போட அரசாங்கத்தார் எண்ணினர்கள். இந்த யோசனையைப் பர்மியர் அனைவரும் ஒருமுகமாய் எதிர்த்தபடியால் முதலில் கொஞ்ச காலம் கடை ஏலம்விட அரசாங்கத்தார் துணியவில்லை. பிறகு, "ஐரோப்பியர்கள், இந்தியர்கள், சீனர்கள் இவர்களுக்கு மட்டும் சாராயம் விற்பதற்காகக்" கடைகள் ஏலம் விடப்படுமென்று அறிவிக்கப்பட்டது. இத்துடன் பர்மியர்களுக்குச் சாராயம் விற்றால் அவர்களைத் தண்டிக்கப்படும் என்றும் சட்டம் செய்தார்கள். ஆனால் அனுஷ்டானத்தில் இது நடைபெறவில்லை. 1893-ம் ஆண்டில் வெளியான அரசாங்க அறிக்கையே இதை ஒப்புக்கொள்கிறது. "பர்மியர்களுக்குச் சாராயம் விற்கக்கூடாதென்னும் தடை உத்திரவு காரியத்தில் நடைபெறவில்லை யென்பதில் சந்தேகம் கிடையாது" என்று சர்க்கார் அவ்வறிக்கையில் கூறுகிறார்கள்.

ஆகவே, விளைந்தபயன் என்ன? தொன்று தொட்டு மதுபானத்தை அறியாதிருந்த ஒரு சாதியாரிடையே அக்கொடிய பழக்கம் அதிவிரைவில் பரவலாயிற்று. இதனால் அவர்களுடைய சன்மார்க்கமும் நாளுக்குநாள் கெட்டு வந்தது. குற்றங்கள் பெருகின.

பஸ்ஸீன் ஜில்லாவில் டிபுடி கமிஷனர் உத்தியோகம் வகித்த மிஸ்டர் ஜி. எப். அர்னல்டு என்பவர் குடிக்கும், குற்றங்களுக்கும் சம்பந்த முண்டா என்று பார்ப்பதற்காக ஓர் ஆராய்ச்சி நடத்தினர். இந்த ஆராய்ச்சியின் முடிவில் அவர் பர்மாவில் லைஸென்ஸு பெற்ற மது பானக் கடைகள் எவ்வளவுக்கு அதிகமாயினவோ, அவ்வளவுக்குக் குற்றங்களும் பெருகி யிருக்கின்றன வென்று தக்க புள்ளி விவரங்களுடன் நிரூபித்தார். ஆனல் சர்க்கார் உடனே இதை ஒப்புக்கொண்டு விடத் தயாராயில்லை. எனவே, பஸ்ஸீன், தாராவாடி, ஹென்ஸாடா என்னும் இந்த மூன்று ஜில்லாக்களிலும் போலீஸ் அதிகாரிகள் இவ்விஷயமாக அறிக்கை அனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வறிக்கையின் பயனுக, அந்த ஜில்லாக்களின் டிபுடி கமிஷனர்கள், கடைகளுக்கும் குற்றங்களுக்கும் சம்பந்தமில்லை யென்றும், ஆனல் குடிக்கும் குற்றங்களுக்கும் சம்பந்தமிருப்பதாய்த் தோன்றுவதாகவும் தெரிவித்தார்கள் !

பிறகு, மிஸ்டர் அர்னல்டின் முடிவுகளைக் குறித்து ஆராய்வதற்காக மாண்டலேயில் போலீஸ் அதிகாரிகளின் மகாநாடு ஒன்று கூடியது. அம் மகா நாட்டில் பெரும் பான்மையோர், பெரும்பாலான வழிப் பறிக் கொள்ளைகளுக்கும், அடிதடி, கொலை முதலிய குற்றங்களுக்கும் சர்க்கார் லைஸென்ஸு பெற்ற கடைகளில் வாங்கிய சாராயமே காரணமென்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

1914, 1915, 1916 இம்மூன்று வருஷமும் இதுபோன்ற ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. 1914-ல் 258 குற்றங்களை எடுத்து ஆராய்ந்ததில் 234 குற்றங்களில் மதுபான சம்பந்த மிருந்ததாய்த் தெரிந்தது. 1915-ல் 218 குற்றங்களையும், 1916-ல் 301 குற்றங்களையும் எடுத்து ஆராய்ந்தார்கள். இவைகளில் முறையே 193, 250 குற்றங்களுக்கு மதுபானம் முதன்மைக் காரணமாகவோ, உடந்தைக் காரணமாகவோ இருந்ததாய்த் தெரியவந்தது.

ஆயினும் வருஷந்தோறும் சர்க்கார் கடைகளை ஏலம் விட்டுத்தான் வருகிறார்கள். வருமானமும் அதிகமாகிக் கொண்டுதான் வருகிறது.

| வருஷம் | கலால் வருமானம் ரூ. |
|---|---|
| 1891 | 43,00,000 |
| 1901 | 54,24,495 |
| 1911 | 72,96,467 |
| 1921 | 97,94,646 |
| 1926 | 1,33,12,634 |

வருமானம் இவ்வாறு விஷம்போல் ஏறிவந்தபோதிலும், ஒருவேளை குடி அளவில் குறைந்திருக்கலாமோ வென்று நினைப்பதற்கும் இடமில்லை. நாட்டுச் சாராய வகையை மட்டும் எடுத்துக்கொண்டால், 1911-ம் வருஷத்தில் பர்மாவில் 26,786 காலன் சாராயம் குடித்தார்கள். 1918-ல் 1,24,409 காலன் குடித்தார்கள். கணக்குப் பார்த்தால் எல்லாக் குடி வகைகளும் இப்படித்தான் அதிகமாயினவென்று தெரியவரும்.

இவ்வாறு 'கிறிஸ்துவ' அரசாங்கத்தார் ஒருபுறம் பர்மாவில் குடியைப் பரவச்செய்து வருகையில், மற்றொரு புறத்தில் உண்மைக் கிறிஸ்துவர்கள் சிலர் அத்தீமை பரவாமல் தடுக்க முயற்சி செய்துவருகிறார்கள். குட் டெம்ப்ளர் என்னும் கூட்டத்தாரும், கிறிஸ்துவ மாதர் மதுவிலக்குச் சங்கத்தாரும் இது சம்பந்தமாகச் செய்துவரும் முயற்சியை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ஆனால் இவர்கள் முயற்சி தக்க பலன் கொடாதிருப்பதற்குக் காரணத்தை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். இது சம்பந்தமாய் மிஸ்டர் ஜேம்ஸ் டி. நீலேஜ் என்பவர் 1913-ம் வருஷத்தில் கூறியதை இங்கு எடுத்துக் காட்டுதல் பொருந்தும்:—

"இம் மாகாணத்திலுள்ள குடிகாரர்களில் 100க்கு 90 பேர் கிறிஸ்துவர்கள். பௌத்தர்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள் முதலிய வகுப்பாரில் 100க்கு 95 பேர் குடிப்பதேயில்லை. ஹிந்துக்களில் 100க்கு 80 பேர் குடியாதவர்கள். இவர்களில் குடிப்பவர்கள் தாழ்ந்த வகுப்பாரே. பர்மாவில் ஏறக்குறைய 130 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்களில் 50,000 பேர்தான் கிறிஸ்துவர்கள். இந்த ஐம்பதினாயிரம் பேரில் 5000 பேர் கூடக் குடியாதவர்களில்லை. ஆகையினால்தான் இந்த சாபக்கேட்டை ஒழிக்கச் சட்டம் ஏற்படாமலிருக்கிறது.........பர்மாவிலுள்ள கிறிஸ்துவர்கள் எல்லாரையும் நாம் வெளியேற்றிவிட்டால் ஆறு மாதத்தில் பூரண மதுவிலக்குச் செய்து விடலாம்."

மிஸ்டர் ஜேம்ஸ் கூறுவதை நாம் முழுவதும் ஒப்புக்கொள்வதற்கில்லை. கிறிஸ்துவர்கள் அனைவரும் வெளியேறி விட்டாலும் அல்லது அவர்களெல்லாரும் மதுவிலக்கை மேற்கொண்டு விட்டாலுங் கூட நமது 'கிறிஸ்துவ' சர்க்கார் மது வியாபாரத்தை விட மாட்டார்கள். காரணம் அதில் கிடைக்கும் வருமானந்தான்.

எந்த மதத்தினராயினும் சரி, ஜனங்கள் எல்லாரும் ஒரு முகமாகச் சேர்ந்து பெருங் கிளர்ச்சி செய்தால்தான் இந்தக் கொடிய வியாபாரத்தை ஒழிக்கலாம்.

---

# பிரசாரகர்களின் அநுபவம்

நமது மாசி இதழில் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரத்தைப் பற்றி எழுதியபோது, "சர்க்கார் பிரசாரகர்களும் முடிவில் நம்முடைய நிலைமைக்குத்தான் வந்தாக வேண்டும். பிரசாரம் மட்டும் போதாது, கடைகளையும் மூடுங்கள் என்று கூடிய விரைவில் அவர்களும் கேட்பார்கள்" என்று குறிப்பிட்டிருந்தோம்.

சேலம் ஜில்லா மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியின் தலைவர் ரெவரண்டு விட்னி அவர்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் வேலை அறிக்கையில் தமது சொந்த அனுபவங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சொல்வதாவது:—"பல கிராமவாசிகள் அடிக்கடி என்ன கேட்கிறார்களென்றால், 'நாங்கள் குடிக்கக் கூடாதென்று சர்க்காருக்கு உண்மையில் விருப்பமானால் அவர்கள் கள்ளுக் கடைகளை ஏன் ஏலம் போடவேண்டும்?' என்று. இதைப்பற்றி அவர்களுக்கு விளக்கிச் சொல்ல நான் எவ்வளவு முயன்றும் பயனில்லை. தற்போதுள்ள கள்ளுக்கடை ஏலம் விடும் முறையில், சர்க்காரே கள்ளு விற்பவர்களென்று ஜனங்களுக்குத் தோன்றுவதால் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரத்தில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இது எங்கள் வேலைக்குப் பெருந்தடையாயிருக்கிறது. பூரண மதுவிலக்கு சாத்திய மாகும் வரையில், மது வியாபாரத்தை ஒழுங்குபடுத்த இவ்வளவு ஆட்சேபகர மில்லாத வேறொரு முறை கண்டு பிடித்தால் நலம்."

பிரசாரகர்கள் சென்ற கிராமங்களிலெல்லாம் மதுவிலக்குப் பிரசாரத்தை ஜனங்கள் பிரியமாக வரவேற்கிறார்களென்றும், குடிக்கும் பழக்கமுள்ள வகுப்பாரும் மதுவிலக்குக்கு சாதகமாகவே யிருக்கிறார்களென்றும் விட்னிதுரை அவர்கள் தெரிவிக்கிறார். முடிவாக அவர் சர்க்காருக்கு சிபார்சு செய்திருப்பதாவது:—"சில கிராமங்களில் ஜனங்கள் தாங்களாகவே சாதிக்கட்டுப்பாடு செய்துகொண்டு குடியை நிறுத்தத் தயாராயிருக்கிறார்கள். ஜனங்களிடையே இது சம்பந்தமாகத் தீவிரமான உணர்ச்சி இருக்கிறதென்று சேலம் பிரசாரகர்கள் தெரிவிக் கிறார்கள். ஆனால் அரசாங்கத்தாரும் கூடியவரையில் கடைகளை மூடி ஜனங்கள் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதற்கு உதவி செய்யவேண்டும்."

உண்மையாக உழைக்கும் மதுவிலக்குப் பிரசாரகர்கள் எல்லாரும் ரெவரண்ட் விட்னி துரை அவர்கள் வந்திருக்கும் முடிவுக்கே வருவார்களென்பதில் சந்தேகமில்லை.

# மைசூர் மதுவிலக்கு சங்கம்

சென்ற மார்ச்சுமீ 26வ பங்களூரில் மாதர் மதுவிலக்கு சபையைச் சேர்ந்த மிஸ் ராபின்ஸன் அம்மையார் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில், மைசூர் இராஜ்யத்திலிருந்து மதுபானத்தை ஒழிப்பதற்காக வேலை செய்ய ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

மிஸ் ராபின்ஸன் தமது தலைமை உரையில், அரசாங்க நிர்வாகம் கலால் வருமானத்தை எதிர்நோக்கி நடப்பது மிகவும் அவகேடான விஷயம் என்பதை எடுத்துக் காட்டினர். "அரசாங்கத்தார் லாபத்தை உத்தேசித்துச் சூதாட்டத்தையும், விபசாரத்தையும் ஆதரிப்பது எவ்வளவு தவறோ அவ்வளவு குடியை ஆதரிப்பதும் தவறாகும்" என்று அவர் கூறினர்.

மதுபானக் கடைகளை அரசாங்கத்தார் ஏற்படுத்தி யிருப்பதால் அவர்களே அவற்றை எடுக்கமுடியுமென்றும், ஒரு வீதியிலுள்ள ஜனங்கள் எல்லோரும் அந்த வீதியிலுள்ள கள்ளுக் கடையை எடுத்துவிட வேண்டுமென்று விரும்பினலும் தற்போது அவர்களுக்கு அந்த அதிகாரம் இல்லையென்றும், குடியைக் குறைப்பதற்காக அதன் விலையை அதிகமாக்கும் முறை பலன் தரவில்லை யென்றும், வருமானத்தைப் போலவே குடியின் அளவும் அதிகமாய்த்தான் வருகிற தென்றும் அவர் எடுத்துக் காட்டினர்.

பின்னர், அடியிற் கண்டவர்களை உத்தியோகஸ்தர்களாய்க் கொண்ட மைசூர் மதுவிலக்கு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது :—

அக்கிராசனர்:—ஸ்ரீமான் பி. சுப்பராம செட்டியார் (பங்களூர் நகர சபைத் தலைவர்).

உப அக்கிராசனர்:—மிஸ் ரத் ராபின்ஸன், ஸ்ரீமான்கள் தேவேந்திரப்பா, வி. வெங்கடப்பா, மாணுஜிராவ்.

காரியதரிசிகள்:—ஸ்ரீமான்கள் சம்பத்கிரி ராவ், வீரண்ண கௌடா, தி. சதாசிவம்.

ஸ்ரீமான் இராமலிங்க முதலியார் அவர்களின் மனைவியார் இந்த சங்கத்திற்கு ரூ. 500 நன்கொடை யளித்துப் போஷகர் ஆகியிருக்கின்றார்.

---

# இஸ்லாமிய வேதம்

"அவர்கள் மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி உம்மை வினவுகின்றார்கள். அவை இரண்டினாலும் பாவமும் பணலாபமும் ஏற்படுகிற தென்றும், ஆனால், லாபத்தைவிடப் பாவமே அதிகமாகக் கிடைக்கிற தென்றும் அவர்களுக்குக் கூறு வீராக."

—குர் ஆன் 2 ; 219

"மதுபானங்கள் முதலியன அசுத்தமே யாகும். அவை சாத்தானுடைய காரியங்கள். எனவே, வெற்றிபெற வேண்டு மாயின் அவற்றை வெறுத்துத் தள்ளுங்கள்."

—குர் ஆன் 5 ; 90

மதுபானம், சூதாட்டம் இவை மூலமாக சாத்தான் உங்க ளிடையே பரஸ்பர சச்சரவையும் அருவருப்பையும் தோற்று வித்து, நீங்கள் ஆண்டவனை வணங்குவதை மறக்கச் செய்ய முயற் சிக்கிறான். நீங்கள் அவன் வலையில் விழுவீர்களா ?

—குர் ஆன் 5 : 91

"நன் னம்பிக்கை கொண்டவர்காள்! மதுபான மருந்தி யிருக்கும்போது தொழுகைக்குச் செல்லாதீர்கள்."

—குர் ஆன் 4 : 43

"சாராய மருந்தாதீர்கள் ; அது எல்லாத் தீமைக்கும் அடிப் படையானது."

—நாயக வாக்கியம்.

# திருமந்திரம்

1. காமமும் கள்ளும் கலதிகட்கே யாகும்.

அறியாமையுடைய கயவர்களுக்கே முறை தவறிய இச்சையும் மதுவருந்தலும் உரியதாகும்.

2. முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்ருேர்.

முழுதும் நீர்மயமான கள்ளை உண்பவர்கள் நீதியென்பது சிறிது மில்லாதவர்கள்.

3. வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்

வாமாகம நெறிபற்றி யொழுகும் சாக்தேயர் (சிறுதெய்வங்களை வழிபடும் பூசாரிகள்) கள்ளையுண்டு மரண மடைபவர்கள்.

4. கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே.

அறிவை மயக்கும் கள்ளையுண்ணும் மாக்கள் தாங்கள் மானுடப் பிறவியெடுத்ததன் கருத்தை அறியாதவர்களே யாவார்கள்.

5. மயக்கும் தியக்குங் கள் வாய்மை அழிக்கும்.

கள்ளானது அறிவை மயக்கும். (என்ன காரியஞ் செய்தேன்; என்ன காரியஞ் செய்தேன்) என்று எண்ணி மனந்தளர்ந்து தியங்கச் செய்யும். உண்மையை அழித்துப் பொய்யை மிகுதிப் படுத்தும்.

---

மகாத்மா காந்தியின் பாத யாத்திரையில் பலவிடங்களிலும் மது விலக்கை வற்புறுத்தி அடிகள் பேசியிருக்கிருர். தண்டி போர்க்களம் சேர்ந்ததற்கு முதல் நாள் காராடி என்னும் கிராமத்தில் பேசியபோது, ஜலால்பூர் தாலூகாவில் கதர்வேலையும், மதுவிலக்கும் நன்கு நடந்திருந்த படியால்தான் இந்தத் தாலூகாவைத் தாம் போர்க்களமாகக் கொண்டதாகவும், ஆனல் அவ்வூரில் இன்னும் மதுபானக் கடை இருப்பதறிந்து வருந்துவதாகவும், ஊரார் அந்தக்கடையை அடியோடு பகிஷ்கரித்து மூடிவிட்டால் தமக்குத் திருப்தி யுண்டாகுமென்றும் கூறினர்.

# ராவ் பகதூர் மிருத்யுஞ்ஜய ஐயரின் மரண சாஸனம்

[அ. ரே.]

நான் இறக்குந் தறுவாயி லிருக்கிறேன். என்னுடைய பரிதாப நிலைமை என்னுடைய கொடிய விரோதிகளுக்கும் ஏற்படாதிருக்குமாக. மனமும் உடலும் மிகவும் புண்பட்டுப் பரிதவிக்கும் இத்தருணத்தில் மரண சாஸனம் எழுதிவைக்கச் சொத்தேனும், வாரீஸேனும் இல்லாமையால், பொதுஜன நன்மைக்காக என்னுடைய ஜீவகதையை மரண சாஸன மாக எழுதிவைக்கத் துணிந்தேன்.

ஏனோ என் பெற்றோர் எனக்கு "மிருத்யுஞ்சயன்" என்று பெய ரிட்டனர்? உயர்ந்த கல்வியும், பதவியும், அறிவும் இருந்தும் கேவலம் குடியாகிய மிருத்யுவை ஜயித்து, நலம்பெற முடியாமல் சீர்குலைந்த என்னை "மிருத்யஞ்ஜய"னென்றழைப்பது, இரண்டு கண்ணுமற்றவனை "நல்ல கண்ணன்" என்றழைப்பதையே யொக்கும்.

கல்வியில் கண்ணும் கருத்துமாயிருந்து 21-வது வயதில் எம். ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறினேன். என் தகப்பனர் என்னை ஐ. ஸி. எஸ். பரீட்சைக்காக இங்கிலாந்துக்கு அனுப்பினர். ஐயோ! அங்கே தான் முதன் முதலில் இந்தப் பேயின் வலையில் விழுந் தேன். அந்நாட்டின் கடுங் குளிருக்கு மதுபானம் அவசியமென்று பலர் சொல்லக்கேட்டு மதிமயங்கி விட்டேன். இதனால்தானே அல்லது வேறு காரணத்தினலோ தேக அசௌக்கிய மடைந்து ஐ. சி. எஸ். பரீட்சைக் குப் போக முடியாமலே போயிற்று. பிறகு சட்டப் பரீட்சைக்குப்படித்து "பாரிஸ்டர்" பட்டம் பெற்றுத் தாய் நாட்டுக்குத் திரும்பினேன். இங்கே வந்தபின் என் தாயாரின் மனதைப் புண்படுத்த விரும்பாதபடியாலும், எனக்கே வெறுப்புண்டானபடியாலும் குடியை விட்டுத் தொலைத்தேன்.

அலஹாபாத் ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில்செய்ய அமர்ந்து சுமார் இருபது வருஷம் வரை வெகு கியாதியுடன் இருந்து வந்தேன். பல தடவைகளில் கல்கத்தா, மதராஸ், பம்பாய் ஹைகோர்ட்டுகளிலும் பெரிய வழக்குகளில் ஆஜராகி ஜயித்துக் கொடுத்திருக்கிறேன். நியா யாதிபதிகள் அநேகர் தீர்ப்பு எழுதும்போது சட்ட முறையை என்னிடம் கலந்து கொள்வதுண்டு.

இங்ஙனமிருக்கையில், பெரிய அதிகாரிகளின் சிநேகம் எனக்கு ஏற் பட்டது. இவர்களுடைய சிபார்சினல் "ராவ்பகதூர்" பட்டம் பெற்

றேன். இந்தப் பட்டமே என்னுடைய அழிவுக்குக் காரணமாயிற்று. பட்டம் பெற்ற வைபவத்தைக் கொண்டாடும் பொருட்டு கவர்னருக்கு ஒரு விருந்து நடத்தினேன். இவ்விருந்தில் தான் மறுபடியும் மதுப் பேயின் வலையில் வீழ்ந்தேன். நாளடைவில் முழுதும் அப்பேய்க்கு அடிமைப்பட்டேன். பலமுறை அபரிமிதமாய்க் குடித்துவிட்டு வீதியில் கிடந்து புரண்டிருக்கிறேன். கோர்ட்டில் கண்டபடி உளறி அவமானப் பட்டிருக்கிறேன். ஆயினும் குடியைவிட்டுக் கரையேற முடியாதவனானேன்.

ஒருநாள் குடிவெறியில் என் மனைவியை அடித்துக் கொன்றுவிட்டதாக என்மீது கொலைக்குற்றம் சாட்டினார்கள். அதிகாரிகளின் உதவியின் பேரில் தற்கொலையென்று தீர்மானிக்கப்பட்டு விடுதலை யடைந்து வீட்டிற்கு வந்தேன். அவளுடைய பெட்டியைப் பரிசோதித்துப் பார்க்க அதில் என் நடத்தை பிடியாமல், மனம் வருந்தி, விஷமுண்ட விவரம் தெரியவந்தது.

என் மகள் விலாஸவதி ‘குடிகாரன் மகள்’ என்று அவள் புருஷனால் நீக்கப்பட்டு மனம் நொந்து கங்கையில் விழுந்திறந்த விஷயம் ஞாபகம் வருந்தோறும், அவள் என்முன் வந்து “என் வாழ்வைக் கெடுத்த பாதகா” என்று சதா அலட்டுவது போல் தோன்றுகிறது.

சென்ற ஒரு வருஷகாலமாக பக்ஷவாத நோயினால் கை கால் நீட்ட மடக்க முடியாமல் கஷ்டப்படுகிறேன். கையில் பணமின்மையாலும், கடைக்குப் போய் வரவே ஒரு மாதகாலமாக முடியாமல் படுத்த படுக்கையிலேயே யிருப்பதாலும் குடி ஒரு வாறாகத் தானே நின்றுவிட்டது.

குடிக்காமல் நான் இப்போது படும் கஷ்டம், குடித்தகாலத்திலிருந்த கஷ்டத்தையும் விட அதிகமாக இருக்கிறது. குடல் அழுகி மலமூத்திரம் வெளிப் போகாமல் கை கால்கள் ஊதிப்போயிருக்கின்றன. நான் பிரபல வக்கீலாக இருந்தபோது சொற்பதொகை பெற்றுக் கொண்டு வழக்கை ஜயித்துக் குடும்ப சொத்தை வாங்கிக் கொடுத்த ஹகீம் கலம்ஷா என்ற வைத்தியரைத் தற்செயலாய்க் கண்டேன். பழைய உதவியை நினைத்து எனக்கு ஏதோ மருந்து கொடுத்து வந்தார். அஸ்வத் நாத் தர்மசாலையில் திண்ணையில் படுத்திருக்கிறேன். இவ்விட மிருக்கும் ஜயந்திபாய் என்னும் புண்ணியவதி கோதுமைக் கஞ்சி வைத்துக் கொடுக்கிறாள்.

இன்று ஹக்கீம் வந்து நாடியைப் பார்த்துவிட்டு இன்னும் இரண்டு நாளில் இறந்து போவேனென்றும், இதுவரை செய்த கொடிய செயல்களுக்காக ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டுப் பிரார்த்திக்கும்படிக்கும் சொல்லிப் போய் விட்டார்.

நான் பள்ளிக்கூடத்தில் வாசித்த நாட்களில், ஏழைக் குடியானவர்களும், தொழிலாளிகளுமே அறிவின்மையால் குடிக்கிறார்கள் என்று எண்ணியிருந்தேன். என் வாழ்க்கையிலேயே குடியாகிய மிருத்யு குடிகொண்டு என்னை இவ்விதம் சீர்குலைக்குமென்று நான் கனவிலும் நினைத்தேனில்லை. என் படிப்பும், அறிவும் எதற்காகின? என் ஜீவ கதையைப் படித்தவர்களாவது, மனதில் திடங்கொண்டு உழைத்து, மது பானத்தை நாட்டை விட்டு முற்றும் ஒழிப்பார்களாக.

---




ஐயோ! இந்தப் பாதகன் தன் மனைவியைக் கிணற்றில் பிடித்துத் தள்ளுகிறான். இக்கொடுமையை நாம் பார்த்துக்கொண்டிருப்போமா? உடனே ஓடிச் சென்று இவ் வேழைப் பெண்ணைக் காப்பாற்ற மாட்டோமா?

கள்ளு சாராயக் கடைக்குப் போகிறவன் ஒவ்வொருவனும் தன் மனைவியைக் கிணற்றில் தள்ளுகிறவனே யாவான். நாடெங்கும் நடக்கும் இப்பாதகத்தை எத்தனை காலம் நாம் பார்த்துக்கொண்டிருப்பது? லட்சக்கணக்கான ஏழைப் பெண்கள் தீனக்குரலில் கதறுவதைக் கேட்டுக்கொண்டு சும்மா யிருப்பதா?

# பெண்மக்கள் தொண்டு

குஜராத்திலும், பம்பாயிலு முள்ள பெண்மணிகள் பலர், மகாத்மா காந்தி நடத்திவரும் சுதந்திரப் போரில் தாங்களும் ஈடுபட அநுமதி கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டார்கள். காந்தியடிகள் இதைப் பற்றி நன்கு சிந்தனைசெய்து, பெண்மக்கள் உப்பு சத்தியாக்கிரஹத்தில் சேரவேண்டாமென்றும், இப்போரை ஆண்மக்களிடமே விட்டு விட்டு அவர்கள் அன்னியத்துணி பகிஷ்காரம், கள்ளுக்கடை மறியல் ஆகிய இவ்விரண்டு தொண்டுகளையும் மேற்கொள்ளவேண்டு மென்றும் தெரிவித்திருக்கிறார்.

தண்டியில் கூடிய மாதர் கூட்டத்தில் மகாத்மா கூறியதாவது:— "அஹிம்சா தர்மத்துடன் அன்னிய ஜவுளிக்கடை மறியலும், கள்ளுக்கடை மறியலும் நடத்துவதற்குப் புருஷர்களைவிட மாதர்களே தகுதி வாய்ந்தவர்கள். அவர்கள் வேண்டிக்கொண்டால் ஆண்மக்களின் இதயங்கள் எளிதில் உருகி, அவர்கள் நல்வழிக்குத் திரும்புவார்கள். குஜராத் நாட்டின் பெண்மணிகள் இத்தொண்டு செய்ய ஏராளமாக முன்வந்தால், மேற்படி கடைகளுக்கு வரும் புருஷர்களைமட்டுமல்லாமல் தேசமுழுவதிலுமுள்ள ஆண்மக்கள் அனைவருடைய கல்நெஞ்சங்களையும் கனியச் செய்து விடலாம். சர்க்கார் உங்களைக் கைது செய்தால் அதனால் நேரிடும் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளவேண்டும். கல்விப் பயிற்சி யில்லையே யென்று நீங்கள் கவலைப்படவேண்டாம். என் மனைவி அதிகம் படித்தவளல்ல. அதனால் அவள் செய்யும் தொண்டுக்கு எவ்விதக் குறைவு மேற்பட வில்லை."

கள்ளுக்கடை மறியல் செய்யும்போது, குடிகாரர்கள் தாக்கினால் என்னசெய்வது என்று ஒரு பெண்மணி கேட்டார். "என்றைய தினம் பெண்மக்கள் தாக்கப்படுகிறார்களோ அன்றைய தினம் இந்தியாவில் கள்ளு சாராயக் கடைகளுக்குச் சாவுமணி அடித்தாகி விட்டதென்று நம்புங்கள். ஆனால் குடிகாரர்களுங்கூட இத்தகைய காருண்யத்தொண்டு செய்யும் உங்களைத் தாக்க மாட்டார்கள். அவர்கள் கட்டாயம் மனங் கசிந்து திரும்பி விடுவார்கள். அப்படி ஒரு வேளை தாக்கினாலும், உங்களுடைய புருஷர்கள் அல்லது சகோதரர்கள் உங்களைக் கொடுமைப் படுத்துவதுபோல் எண்ணிப் பொறுத்துக் கொள்ளவேண்டும்."

முதன் முதலாக சூரத் ஜில்லாவில் கள்ளுக்கடை மறியல் தொடங்குவதென்று தீர்மானித்திருப்பதாய்த் தெரிகிறது. இந்த ஜில்லாவில் நீண்ட காலமாக சிறந்த சமூகத்தொண்டு செய்து வந்தவரும், பார்ஸி வகுப்பைச் சேர்ந்தவருமான ஸ்ரீமதி மிதுபென் பெடிட் என்னும் பெண்மணியின் தலைமையில் 25 ஸ்திரீ தொண்டர்கள் கள்ளுக் கடைமறியல் தொடங்குவார்கள்.

பம்பாயிலும் மேற்சொன்ன மறியல் தொண்டுக்காகப் பெண்மணிகள் சேர்ந்து வருகிறார்கள்.

---

# THE DRUNKARD



CONSUMES HIS MONEY IN DRINK — LEAVES HIS WIFE AND CHILDREN TO STARVE

இதுவும் சர்க்கார் படங்களில் ஒன்று. குடிகாரன் பாடுபட்டுத் தேடிய பணத்தைக் கள்ளுக்கடையில் தொலைக்கிறான். அவனுடைய மனைவி மக்கள் தெருவீதிகளில் பிச்சை யெடுத்து அலைகிறார்கள்.

இப்படி மனைவி மக்களைத் தவிக்கவிட்டுக் குடிகாரன் கடையில் கொடுக்கும் பணந்தான் சர்க்காரின் ஆடம்பரச் செலவுகளுக்கெல்லாம் பயன்பட்டு வருகிறது. உத்தியோகஸ்தர்களுக்கு ஆயிரம், பதினாயிரம் சம்பளம் கொடுப்பதும், லட்சக்கணக்கில் செலவு செய்து அரசாங்க மாளிகைகள் கட்டுவதும் எல்லாம் இந்தப்பணத்தைக் கொண்டுதான். இந்தக் கொடுமை எப்போது நீங்கும்?

# குப்பனின் பணி

[தீ. ஜ. ர.]

நம் உள்ளத்தில் களிப்பு இருந்தால் நாம் பார்க்கும் பொருள்களி லெல்லாம் மகிழ்ச்சி நிறைந்திருப்பதாய்க் காண்கிறது. நமதுள்ளம் துக்கத் திலிருந்தால் உலகமே விசனக் கடலுள் ஆழ்ந்திருப்பதுபோலத் தோன்று கிறது. இராஜம்மாள் விஷயத்தில் தற்போது இது மிகவும் உண்மையா யிருந்தது.

தோட்டத்திலிருந்து புஷ்ப வாசனையைத் திரட்டிக் கொண்டுவந்த மந்த மாருதம் அவளுக்கு இன்ப மளிக்கவில்லை. புத்தகங்கள் வெறும் புலம்பல்களாய்த் தோன்றின. வீணையை மீட்டிப் பார்த்தாள். அதன் கீதம் அழுகுரலா யொலித்தது.

* * * *

“ராஜம்மா! ஒருவிதமா யிருக்கிறாயே இன்று, ஏன் இப்படி?” என்று வினவினாள் சுந்தரம்.

“சுந்தரம்—சுந்தரம்—” என்று திக்கித் திக்கிப் பேசிய ராஜம் “இதோ பார்!” என்று அவிழ்ந்து தொங்கிய தன் கேசத்தை எடுத்து விசிறினாள். அவளுடைய கமல நயனங்களினின்றும் ‘பொல பொல’ என்று கண்ணீர்த் துளிகள் சிந்தின.

ராஜம் ஒரு பிராமண விதவைப் பெண். அறிவு வராத காலத் திலேயே அவள் கைம்பெண்ணாகி விட்டாள். செல்வக் குடும்பத்தில் பிறந்த ராஜம் துன்ப மறியாது வளர்க்கப் பட்டாள். இப்போது அவ ளுக்கு வயது வந்துவிட்டது. இனிமேல் அவள் சிரத்தில் கூந்தல் கூடா தாம். இந்த சமூகக் கொடுமைக்கு அவள் அண்ணனும் உடன் பட் டான். தமையன் ஆதரவில் தான் அவள் தற்சமயம் இருந்து வந்தாள்.

“சுந்தரம்! இந்தக் கூந்தல் என்ன பாபத்தைச் செய்தது?—ஐயோ, நினைத்தால் நடுங்குகிறதே!” என்றாள் ராஜம்.

அவளுடைய தோழி சுந்தரம் அளவிறந்த வேதனை யடைந்தாள். ராஜத்திற்கு அவள் எவ்வாறு ஆறுதல் கூறுவாள்? திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று.

“ராஜம்! உனக்கு இந்த வீடு எதற்கு? இவர்கள் உன் பந்துக்கள் அல்ல; பகைவர்கள்!” என்று சம்பந்த மில்லாமல் ஆத்திரத்துடன் சொன்னாள்.

ராஜம் சுந்தரத்தின் முகத்தை உற்று நோக்கினுள். அவள் வாய் ஒன்றும் பேசவில்லை.

சுந்தரத்தின் கணவன் தாராள சிந்தையும் சீர்திருத்தக் கருத்துக் களும் உள்ளவர். இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்விப்பதில் சாதகமான அபிப்பிராயங் கொண்டவர். இதைப்பற்றித் தன் அருமைத் தோழியிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று அவள் பல நாள் எண்ணிய துண்டு. ஆனுல் ஒருவிதக் கூச்சத்தால் இதுகாறும் சொல்லாம லிருந் தாள். இப்பொழுது சொல்லலா மென்று நினைத்தாள்—சொல்லி விட்டாள்.

கொடுமையும், செருக்கும் கலந்ததோர் குறுநகை புரிந்தாள் ராஜம். சிறிது சிந்தித்துப் பின்னர் நெட்டுயிர்ப் பெறிந்தாள். "மறு மணமா ?— சுந்தரம் !—இல்லை, இல்லற சுகம் எனக்கில்லை—எனக்கு வேண்டாம்." என்று அழுத்தமாய்க் கூறி மேலும் சொல்வாள் :—

"நான் வேண்டுவது அதுவன்று. என்னை அலங்கோலம் செய்யா மல் விட்டால் போதும். என் புத்தகம், என் வீணை, எனது சிறு தொழில் கள், இவற்றுடன் நான் வாணுள் முழுதும் கன்னிகையாகவே யிருந்து நிம்மதியாய்க் காலங் கழிப்பேன்.—இதற்கு உன் கணவர் உதவி செய் வாரா ?" என்ருள்.

*   *   *   *

சுந்தரம் ராஜத்தின் பிடிவாத குணத்தை நன்கறிந்தவள். தன் கணவர் என்ன செய்வா ரென்று திட்டமாய்க் கூறவும் அவளால் முடிய வில்லை. பந்துக்களும், உடன் பிறந்த சகோதரனுங்கூடப் பரம 'சத் துரு' க்களாகிவிட்ட ராஜத்திற்கு, அவர்களுடைய விரோதத்தின் மேல் தன் கணவர் என்ன உதவிசெய்ய முடியும் ? சட்டந்தான் இடங் கொடுக்குமோ, என்னவோ ? இருந்தாலும் பக்கத்து நகரிலிருந்த அவ ருக்கு எழுதிக் கேட்கலாமென்று இருவரும் கலந்து முடிவு செய்தார்கள்.

சுந்தரம் தன் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினுள். ராஜம் அதைப்படித்துப் பார்த்து ஒப்பினுள். கடிதத்தைத் தபாலில் அனுப்பா மல் ஆள்மூலம் அனுப்புவதென்று தீர்மானித்தார்கள். ராஜம் குப்பனைக் குறிப்பிட்டாள்.

"குப்பனு ? அவனை நம்பலாமா ?" என்ருள் சுந்தரம்.

"நன்ருய் நம்பலாம். அவன் தான் என்னைச் சிறு குழந்தை முதல் தூக்கி வளர்த்தவன். அவனுக்கு ஒருபெண் குழந்தையிருந்து இறந்து போயிற்று. மனைவியும் காலமானுள். இன்றைக்கும் நாளைக்கும் என் னிடம் அவனுக்கு அளவற்ற வாஞ்சை. இந்த உலகத்தில் அவனுக்கு

யார் இருக்கிறார்கள்? என்னைப்போல அவனும் ஓர் அகதி" என்று ராஜம் கனிவுடன் உரைத்தாள்

"ஆனால் அவன் குடிகாரன்" என்று சிறிது வெறுப்புடன் கூறினாள் சுந்தரம்.

"சிலவேளை அவன் குடிக்கிறான் என்பது உண்மை தான். ஆனால், எப்படியம்மா அவன் அதைவிட முடியும்? உனக்கும் எனக்கும் படிப்பு உண்டு; பாட்டு உண்டு; அழகிய சித்திர வேலைகள் உண்டு. கள் வெறியைத் தவிர, அவனுக்கு வேறு என்ன உண்டு?" என்றாள் ராஜம்.

"ஆமாம்! அதோடு, இப்படிப்பட்ட ஆட்களுக்குக் கள்ளு சாராயம் இல்லையானால் நாம் இடும் வேலைகளை அவர்களால் செய்ய முடியாது; செய்யவும் மாட்டார்கள். கொஞ்சம் வித்தியாசமும் வேண்டுமல்லவா?" என்று சுந்தரம் ஒப்பமிடுவதுபோல் உரைத்தாள்.

"நான் அப்படி நினைக்கவில்லை" என்று சுருக்கமாகப் பதிலளித்த ராஜம் "அவனிடந்தான் இந்தக் காரியத்தை ஒப்படைக்க வேண்டும். அவன் குடித்தால் என்ன? அவனது வாத்ஸல்யம் அன்றோ பெரிது!" என்றாள்.

## 2

உண்மையிலே குப்பன் ராஜத்தினிடம் அளவற்ற பிரியம் உடையவன். தனது துக்கத்தை அவனிடம் அவள் தெரிவித்தபொழுது, அவன் பெரிதும் வருந்தினான். ஆனாலும், அது "பாப்பாரச் சாத்திரமாயிற்றே" என்று அவன் கொஞ்சம் தயங்கினான். தன் உத்தேச ஏற்பாடு நியாயமென்று அவள் விரித்துக் கூறியபொழுது, அவளுக்கு ஒத்தாசை புரிய இசைந்தான்.

குப்பன் விடிய நான்கு நாழிகைக்கு எழுந்திருந்து, நகரை நோக்கிப் புறப்பட்டான். நகரம் சுமார் பத்துமைல் தூரத்திலிருந்தது. நாகரிகமான கப்பி ரஸ்தா கிடையாது. மண்சாலை தான்.

மெல்ல மெல்ல நடந்து சென்றான். ஏழாவது மைலில், ஒரு சிறு தோப்பு, அதற்குள்ளே ஓர் குடிசை.

அவன் இளைஞனாயிருக்கையில், அந்தத் தோப்பைக் கண்டாலே ஒரு வெறுப்பு உண்டு. அதே தோப்பு இப்பொழுது அவனுக்குத் தேவலோகத்தைக் கண்டதுபோல ஆனந்த முண்டாக்குவதா யிருந்தது. ஏன்? அந்தக் குடிசை ஒரு கள்ளுக்கடை. பாவம்! அவன் அப்பேயின் அடிமையாயிருந்தான். வழிச்செலவுக்குக் கொண்டுவந்த காசில் ஒரு பகுதி அங்கே தொலைந்தது. குடிசையிலிருந்து திரும்பியபோது அவன் கால் தள்ளாடியது. ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்து, ஓர் மரத்தடியில் பொத்தென்று விழுந்தான். அமிதமாகக் குடித்ததால் ஏற்பட்ட மயக்கம் அது.

மயக்கம் நன்கு தெளிய வில்லை யெனினும் தள்ளாடிக்கொண்டு எழுந்தான். எதிரே ஒரு வண்டி வருவதைக் கண்டான். அதில் இருந்த ஆளைமட்டும் அவனுக்கு நன்ருக அடையாளம் தெரிந்தது. அந்த ஆள் ராஜத்தின் சகோதரனே.

குடி மயக்கத்தில் நிதானமில்லாத குப்பனுக்கு ஒரு வெறி உண்டா யிற்று. வண்டியின் எதிரே போய் நின்றுகொண்டு, "இது யார் வண்டி யடா? இதோ வந்திருக்கிறேனடா காட்டு ராஜா. என் ராஜத்தை மொட்டை் யடிக்க உன்னாலாகுமாடா? இதோ பாரடா?" என்று பல "அடா"க்களுடன் கனைத்து, வண்டியின் மூக்கணையைப் பிடித்துப் பலமாக அசைத்தான். இதனல் மருண்ட மாடு ஒன்று அவனை முட்டித் தள்ளிவிட்டது.

குப்பனின் பிதற்றல் ராமுவுக்குச் சந்தேகத்தை உண்டாக்கிற்று. மாடு முட்டியதால் கீழே விழுந்து போதையினுல் பிதற்றிக்கொண்டு புரண்ட குப்பனை அவன் உற்றுப் பார்த்தான். அவன் மடியிலிருந்து ஒரு கடிதம் தரையில் விழுவதைக் கண்டான். அதை எடுத்துப் பிரித் துப் படித்தான். அவன் முகம் கறுத்தது. சாதிக் கட்டுப்பாடு, சமூக பகிஷ்காரம், ஊர் வம்புப் பேச்சு, அவமானம் முதலியவை அவன் மனக் கண் முன் தோன்றின. குப்பனை சாலையின் ஒரு புறமாய்ப் புரட்டித் தள்ளிவிட்டு வண்டியிலேறி விரைவாக ஓட்டச் சொன்னுன்.

## 3

அதற்கும் ஒருநாள்—ஒரு கன்னிகையின் அளகத்தை எடுக்கவும் ஒருநாள் பார்த்திருந்தார்கள். ராஜம் சிறைப்படுத்தப் பெற்றிருந்த அறை யில் பொழுது புலருமுன் ராமு சென்று நோக்கினுன். அவளது வீணை முறிந்து கிடந்தது; புத்தகங்கள் சாம்பராகி யிருந்தன; மணிகளும், பட்டு நூலும் சிதறிக்கிடந்தன; சில அரும்புகளும் மலர்களும் அங்குமிங் கும் கசக்கி யெறியப் பெற்றிருந்தன. ராஜத்தை மட்டில் காணவில்லை. ராமு இரைந்தான்; கூக்குரல் போட்டான். ஆனல், பயன் ஒன்று மில்லை. அங்குமிங்கும் ஓடினுன். வீடு முழுவதும் பரபரப்பு.

* * * *

தோட்டத்தில் ஒரு மரத்தடியில் ராஜத்தின் அழகியமேனி கிடந்தது. அவள் அருகே ஓர் ஆள் நின்ருன். ஈன ஸ்வரத்தில் "குப்பா! குடி வெறியிலே நீ எனக்குச் செய்த பணியை நான் வானுலகிலும் மறக்க மாட்டேன்" என்ருள் கன்னிகை.

குப்பன் முகத்திலறைந்துகொண்டு, "ஐயோ! ராஜம்!—உன் முகத்தையும் இழந்து விட்டேனே—ஐயோ!" என்று கதறினுன்.

ராஜத்திற்கு விஷக்கிழங்கு கொணர்ந்து கொடுத்ததற்காக, குப்பன் இப்போது கடுஞ்சிறைவாசம் புரிந்து கொண்டிருக்கிறான். அதன் உண்மையை நான் அறியேன். ஆனால், ராஜத்தின் தற்கொலைக்குத் தானே காரணம் என்று அவன் ஒப்புக் கொள்கிறான். "கள் குடித்தேனல்லவா, பாவி?" என்று ஓயாது புலம்புகிறான்.

---

# WHAT DRINK DOES



# QUARRELS AND ACCIDENTS

இது குடியின் விளைவுகளைக் காட்டும் சர்க்கார் படம். ஐயோ! பாவம்! அதோ கிடக்கும் அந்த மனிதன்மீது மோட்டார் வண்டி ஏறிவிட்டது. செத்துப் போனவனோ, மோட்டார் ஓட்டியோ இரண்டு பேரில் ஒருவன் குடிகாரன்.

வலப்புறத்தில், குடித்துவிட்டு வந்த கூலிக்காரன் வீட்டில் சோறு தயாராயில்லை யென்று தன் மனைவியின் மயிரைப் பிடித்துக்கொண்டு அடிக்கிறான்.

இடது ஓரத்தில் கள்ளரக்கன் பீப்பாயிலிருந்து தலையை நீட்டி இந்தக் காட்சிகளைக் கண்டு ஆனந்தப்படுகிறான். அவனுக்குப் பெரிய தைரிய மென்னவென்றால் "சர்வ வல்லமையுள்ள ஆங்கில சர்க்கார் நமக்குப் பக்க பலமாயிருக்கும் வரையில் நம்முடைய திருவிளையாடல்களுக்குக் குறைவு கிடையாது" என்பதே.

# கடற்கரைக் கிளிஞ்சல்

வட ஆறுகாடு ஜில்லா விரிஞ்சிபுரத்தில் கூடிய சென்னைமாகாண வன்னிகுல க்ஷத்திரியர் மகாநாட்டில் பின்வரும் தீர்மானம் நிறைவேறியது :—

"பூரண மதுவிலக்கை உடனே அமுலுக்குக் கொண்டுவரும்படி இந்த மகாநாடு கவர்ன்மெண்டைக் கட்டாயப்படுத்திக் கேட்டுக்கொள்கிறது. அதனால் கவர்ன்மெண்டுக்கு ஏற்படும் வருமான நஷ்டத்தைப் புகையிலை சம்பந்தப்பட்ட எல்லா தினுசுகளுக்கும் வரிவிதித்து சரி செய்து கொள்ளும்படி தெரிவித்துக் கொள்ளுகிறது."

இந்தத் தீர்மானத்தை சர்க்காருக்கு நேரில் அறிவிக்கும் பொருட்டு நாட்டிறம்பள்ளி ஸ்ரீமான் சி. சாமுண்டி கண்டர் முதலிய ஐந்து கனவான்களடங்கிய ஒரு கமிட்டியையும் மகாநாட்டில் நியமித்திருக்கிறார்கள்.

*  *  *  *

மதுவிலக்கினால் ஏற்படும் வருமான நஷ்டத்துக்கு ஈடு செய்யப் புகையிலை சாமான்களுக்கு வரி போடுங்கள் என்று மேற்படி தீர்மானத்தில் சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் இதற்குச் சொல்லக்கூடிய ஆட்சேபத்தை நாம் ஒருவாறு எதிர்பார்க்கலாம். "எவ்வளவு வரி புகையிலைக்குப் போட்டாலும் கலால் நஷ்டத்துக்கு ஈடாகாது" என்பார்கள். இதற்கு நாம் சொல்ல வேண்டிய பதில் ஒன்றே ஒன்றுதான். "செலவைக் குறையுங்கள்; சென்ற ஐந்து வருஷத்தில் ஏறியிருக்கும் ஐந்து கோடி ரூபாய் செலவைக் குறையுங்கள்" என்பது தான்.

*  *  *  *

மேற்படி மகாநாட்டில் இந்த மதுவிலக்குத் தீர்மானத்துக்கு முதன்மை கொடுத்து நிறைவேற்றினார்கள் என்று "வன்னிகுல மித்திரன்" பத்திரிகைமூலம் அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். அரசாங்கத்தை வற்புறுத்தித் தீர்மானம் செயலில் வருமாறு செய்ய மகாநாட்டார் பெருமுயற்சி எடுப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

*  *  *  *

ஜெர்மனி தேசத்தில் அச்சுக்கோக்கும் தொழிலாளிகளுக்குள் ஒரு சோதனை நடத்தினார்கள். அதாவது நாலு தொழிலாளிகளை எடுத்துக்கொண்டு மதுபானத்தினால் அவர்களுடைய வேலைத்திறமை அதிகமாகிறதா, குறைகிறதா என்று பார்த்தார்கள். சோதனை நான்கு நாள் நடந்தது. முதல் நாளும் மூன்றும் நாளும் அவர்களுக்கு சொற்ப அளவு மதுபானம் கொடுக்கப்பட்டது. இரண்டாம் நாளும், நாலாம் நாளும் மதுபானம் கொடுக்கவில்லை. நடந்த வேலையைக் கடைசியில் மதிப்பிட்டுப் பார்த்த பொழுது மதுபானத்தினால் 100 க்கு 9 பங்கு வீதம் வேலைத்திறமை குறைந்ததாகத் தெரிய வந்தது.

இதேமாதிரி "டைப் ரைடிங்" என்னும் இயந்திர எழுத்துக் காரர்களைக் கொண்டு ஒரு சோதனை நடந்தது. சாதாரணமான காலத்தில் அவர்களுடைய எழுத்தில் 100 க்கு 14 வீதம் தவறுகள் நேர்ந்தன. மிகவும் களைப்பாயிருந்த காலத்தில் வேலை செய்தால் 100 க்கு 16 வீதம் தவறு செய்தார்கள். ஆனால் மிதமாக மதுபானம் செய்தபிறகு வேலை செய்யுங்கால் 100 க்கு 31 வீதம் தவறுகள் ஏற்பட்டன. இத்தகைய சோதனைகள் பல நடத்தி, மது பானமானது மூளையை மழுங்கச் செய்கிறதென்றும், மூளை வேலைக்காரர்களின் வினைத்திறமை அதனால் பெரிதும் குறைகிறதென்றும் முடிவு செய்தார்கள்.

* * * *

பர்மா நாட்டில் வசிக்கும் நமது சந்தாநேயர்களில் ஒருவரான ஸ்ரீமான் சாமிநாதன் என்னும் அன்பர், நான்கு ரூபாய் பணம் அனுப்பி, இன்னும் நான்கு வருஷத்துக்குத் தம்மைச் சந்தாதாரராய்ச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டிருந்தார். தேசத்தில் பெரிய விடுதலைப்போர் தொடங்கியிருக்கும் இச்சமயத்தில் "விமோசன" த்தைத் தொடர்ந்து நடத்துவது பற்றி நிச்சயம் சொல்வதற்கில்லை யென்றும், ஆகையால் ஒருவருஷத்துக்குமேல் பதிவுசெய்து கொள்ள முடியாதென்றும் அவருக்குத் தெரிவித்திருந்தோம். இதற்குப் பதிலாக, மேற்படி ரூபாய் நான்கையும் "விமோசன" த்துக்கு நன்கொடையாக வைத்துக் கொள்ளும்படி அவர் எழுதியிருக்கிறார். இவ்வன்பருக்கு நமது மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

* * * *

"கள் விற்றுக் கலப் பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் கற்பூரம் விற்றுக் கால்பணம் சம்பாதிப்பது மேல்" என்பது ஒருதமிழ்ப் பழமொழி. இதைக் கள்ளுக் கடைக் குத்தகைக்காரர்கள் மட்டுமென்றி, சர்க்காரும் கலால் மந்திரி மாருங்கூடக் கவனிக்கவேண்டும்.

* * * *

மகாத்மா காந்தி ஏப்ரல் 4உ ஒரு கிராமத்தில் பேசியபோது, மதுபான வழக்க முள்ளவர் எவரும் தண்டி போர்க்களத்துக்கு வேடிக்கைபார்க்கவும் வரக்கூடாதென்றும், அப்படி யாராவது வந்தால், சமுத்திரதீரத்தின் தூய நீரில் முழுகி, இனி மதுபானத்தை விட்டு விடுவதாக ஆணையிட வேண்டுமென்றும் கூறினார்.

* * * *

"அரசாங்கத்தார் செய்த காரியங்களுக் குள்ளே, கௌரவமுள்ள ஹிந்து முஸ்லிம்களுக்கு மிகவும் அருவருப்பைத் தந்த காரியம் என்னவென்றால், கள்ளு சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களின் விற்பனைக்கு வரி விதித்ததேயாகும். அவர்களுக்கு நம்மிடமுள்ள மதிப்பைக் குறைத்தது ஆப்காரி வரியைப்போல வேறொன்றும் கிடையாது. தாங்கள் பாதகமென்றே கருதும் ஒரு வியாபாரத்திலிருந்து சர்க்கார் வருமானம் சம்பாதிப்பதை அவர்கள் பார்க்கிறார்கள். தங்களைச் சுற்றிலும் கிராமங்களில் கள்ளு சாராய விற்பனைக் கடைகள் பெருகிவருவதை அவர்கள்

காணும்போது, மதுபானம் அதிகமாகாமல் ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதே நம்முடைய நோக்கம் என்பதை அவர்கள் அறியக் கூட வில்லை."—இவ்வாறு 1821-ம் வருஷத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவரான ஹென்ரி ஜார்ஜ் டக்கர் என்னும் ஆங்கிலேயர் எழுதினார்.

* * * *

இந்தியாவில் பற்பல மாகாணங்களிலுமுள்ள ஜனங்களில் ஒவ்வொருவரும் கலால் வரி மூலம் சர்க்காருக்குக் கொடுக்கும் பணத்தின் சராசரிக் கணக்கு :—

| மாகாணம் | சராசரி தலைவரி | |
|---|---|---|
| பம்பாய் | 265 | பை |
| சென்னை | 240 | ,, |
| பர்மா | 205 | ,, |
| அஸ்ஸாம் | 179 | ,, |
| மத்திய மாகாணம் | 163 | ,, |
| பஞ்சாப் | 113 | ,, |
| பீஹார்-ஒரிஸ்ஸா | 106 | ,, |
| வங்காளம் | 92 | ,, |
| வடமேற்கு மாகாணம் | 84 | ,, |
| ஐக்ய மாகாணம் | 60 | ,, |

சர்க்காருக்குக் கொடுப்பது இவ்வளவானால், ஜனங்கள் கள்ளுக்குச் செலவு செய்வது இதைப்போல் நாலு மடங்கு என்பதை மறந்துவிடக் கூடாது.

* * * *

சூரத் ஜில்லாவில் மதுவிலக்குக் கிளர்ச்சியினால் நல்ல பயன் விளைந்திருக்கிறதென்பதை, பம்பாய் அரசாங்கத்தின் கலால் இலாகா அறிக்கை ஒப்புக்கொள்கிறது. 1928-29ம் ஆண்டில், அதற்கு முந்தைய வருஷத்தைவிட, கள்ளுக்கு விட்ட மரங்களின் தொகையில் 19,636 குறைந்தது. கள்ளு விற்பனையும் 11, 96, 898 காலன் குறைந்தது. ஜனங்களின் நலத்தில் கவலையுள்ள சர்க்காரானால் இவ்வளவு நல்ல பயன் விளைந்ததற்காகத் தொண்டர்களைப் பாராட்ட வேண்டுமல்லவா? அதற்குப் பதிலாக, சூரத் ஜில்லா மாஜிஸ்ட்ரேட், சென்ற இதழில் குறிப்பிட்டபடி பயமுறுத்தல் உத்திரவு பிறப்பித்தார்!

* * * *

அஸ்ஸாம் மாகாணத்தின் கலால் இலாகா அறிக்கையில் ஒரு விசேஷ சம்பவம் காணப்படுகிறது. ரிஸர்வ் போலீஸ்காரர்களும், இராணுவத்தைச் சேர்ந்த துப்பாக்கி வீரர்களும் வசித்த பகுதிகளில் 21 இடத்தில் திருட்டுச் சாராயம் காய்ச்சப்பட்டு வந்ததைக் கண்டு பிடித்தார்களாம்! இதே போலீஸ்காரர்கள் தான் ஊரில் திருட்டு நடக்காமல் பாதுகாப்பவர்கள்! சர்க்கார் நிர்வாகத் திறமைக்கு இதைவிட அத்தாட்சி வேறென்ன வேண்டும்?

அஸ்ஸாமில் சென்ற வருஷத்தில் செலவான கள்ளு சாராயத்தில் 100 க்கு 60 பங்கு தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்யும் தொழிலாளி களால் குடிக்கப் பட்டதாம்! தோட்டத் தொழிலாளிகளுக்கு அவர்களு டைய ஐரோப்பிய எஜமானர்கள் கொடுக்கும் சம்பளம் மிகக் குறைவு. இதைப்பற்றி எவ்வளவோ கிளர்ச்சி நடந்து வருகிறது. ஆனால் அப்படி அவர்கள் பெறும் சொற்பக் கூலியையும் நமது காருண்ய சர்க்கார் கள்ளு சாராயக் கடைகள் மூலம் பிடுங்கிக் கொள்கிறார்கள். ஏழைகளிடம் நமது சர்க்காருக்குள்ள கருணையை என்னவென்று சொல்வது?

* * * *

நம் மாகாணத்தில் தற்போது மேட்டூரில் நடக்கும் அநியாயமும் சர்க்காரின் கருணையை நன்கு காட்டுவதாகும். கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களின் பெரும் பகுதிகளில் சென்ற பத்து வருஷமாய் நல்ல மழை யில்லாமல் ஏறக்குறைய பஞ்சமாகவே இருந்து வருகிறது. இந்த ஜில்லாக்களில் ஏழைகள் அனைவருக்கும் மேட்டூர் அணையில் வேலை கொடுத்துச் சிறந்த பஞ்ச நிவாரண வேலை செய்திருக்கலாம். ஆனால் இயந்திரங்களுக்கும் செமண்டுக்குமாக சர்க்கார் கோடிக்கணக் காக ரூபாயை அன்னிய நாட்டு முதலாளிகளுக்குக் கொடுத்து விட் டார்கள். எனினும், எவ்வளவு தான் இயந்திரங்கள் வந்தாலும் மனிதர் சிலரேனும் இல்லாமல் காரியம் நடக்குமா? ஆகவே சில ஆயிரம் தொழிலாளிகள் தற்போது அங்கே வேலை செய்கிறார்கள். ஆனால் இவர்களும் தாங்கள் பெறும் சம்பளத்தை முழுதும் அடைவதில் சர்க் காருக்கு இஷ்டமில்லை. மேட்டூரில் வேலை ஆரம்பித்ததோ இல்லையோ, உடனே கள்ளு சாராயக்கடைகளும் வந்துவிட்டன. எற்கனவே குடித்தறியாதவர்களும் இப்பொழுது குடிக்கக் கற்றுச்கொண்டு கூலிப் பணத்தில் பெரும்பகுதியைத் தொலைத்து வருகிறார்கள்.

* * * *

பீஹார் மாகாணத்தின் அரசாங்க நிர்வாகம் கள்ளரக்களின் கையில் நன்கு சிக்கிக்கொண்டிருக்கிறது. அம்மாகாணத்தின் சர்க்காரின் மொத்த வருமானத்தில் பாதி கலால் வருமானமாகும். ஆகவே, வரி கொடுப் போர் சொற்படிதான் அரசியல் நடக்கவேண்டுமென்று ஏற்படும் பட்சத் தில் அம்மகாணத்தில் எல்லாக் காரியங்களும் குடிகாரர் சொற்படிதான் நடக்கவேண்டியதாகும். குடிகாரர் தாங்கள் கொடுக்கும் வரி விகிதப் படி தங்களுக்குத் தனித்தேர்தல் தொகுதி வேண்டுமென வற்புறுத்தினால் சட்டசபையில் பாதி ஸ்தானங்களை அவர்களுக்காக ஒதுக்கி வைத்து விட வேண்டியதுதான்.

* * * *

பீஹார் மாகாணத்தின் மொத்த கலால் வருமானம் 1928-29 ல் 1,89,90,778 ரூபாய். சென்ற வருஷத்தைவிட இது 7 லட்சம் குறைவு. வருமானம் குறைந்ததற்கு ஜனங்களின் மது விலக்குக் கிளர்ச்சியும் ஒரு காரணம் என்பதாக சர்க்கார் கலால் அறிக்கை கூறுகின் றது. காங்கிரஸ் கமிட்டி, சேவா சமிதி இவைகளின் முயற்சிகளைப்பற்

றிக் குறிப்பிட்டு விட்டு, 'தாழ்ந்த' வகுப்பாரின் முன்னேற்ற முயற்சிகளைக்குறித்து அவ்வறிக்கை சொல்லுவதாவது :—

"தாழ்ந்த வகுப்பார் முன்னேற்ற மடைவதற்காக சாதிக் கட்டுப்பாடுகளின் மூலம் குடியை நிறுத்த முயற்சி செய்துவருகிறார்கள். இவ் வியக்கத்தின் பயனாக பாட்னா, கயா ஜில்லாக்களில் நாட்டுச்சாராயக்குடி மிகவும் குன்றிந்து விட்டது. முஸபர்பூர் ஜில்லாவில் கோலா என்னும் சாதியார் பெரும்பாலும் குடியை நிறுத்திவிட்டார்கள். கூர்மி சாதியார் மகாநாடு கூடிப் பூணூல் தரித்துக் கொண்டு குடியை விட்டு விடவேண்டுமென்று தீர்மானித்தார்கள். லால்கஞ் பட்டணத்தில் தச்சர்கள் குடியை நிறுத்தத் தீர்மானித்து ஏறக்குறைய அதை நிறை வேற்றி வைத்திருக்கிறார்கள்."

இவ்வாறு ஜனங்கள் தாங்களாகவே குடிப்பேயைத் தொலைக்கப் பெருமுயற்சி செய்யும்போது சர்க்காரின் கடமை என்ன? "தாழ்ந்த வகுப்பாரின் ரக்ஷகர்கள் நாங்கள்" என்று சர்க்கார் சொல்வது உண்மையானால், இச்சமயத்தில் முன்வந்து ஜனங்களுக்கு உதவிசெய்ய வேண்டாமா? ஜனங்கள் உறுதி பிறழா திருத்தல் சாத்தியமாகும் பொருட்டு, கடைகளை மூடி விட்டால் அல்லவா சர்க்கார் பேச்சு உண்மையாகும்?

* * * *

சென்னையில் ஏப்ரல்மீ 19௳ நடை பெறு மென்று அறிவிக்கப்பட்டிருந்த மதுவிலக்கு மகாநாடு, அத்தேதியில் நடைபெறாது என்று தெரிவித்துக் கொள்கிறோம். தேசத்தின் அரசியல் நிலைமையை முன்னிட்டும், மதுவிலக்கு சங்கத்தின் காரியதரிசி சத்தியாக்கிரஹப்போரில் ஈடுபட்டிருப்பதை உத்தேசித்தும் மேற்படி மகாநாட்டைத் தள்ளிப் போடவேண்டுமென்று உபஅக்கிராசனர் திவான்பகதூர் எம். இராமச்சந்திரராவ் அபிப்பிராயம் தெரிவித்ததின் மேல், மற்ற நிர்வாக சபை அங்கத்தினர் பலரும் இதை ஒப்புக்கொண்டார்கள். மறுபடி மகாநாடு எப்போது நடத்துவதென்பது, தேசத்தின் அரசியல் நிலைமையை அநுசரித்துப் பின்னால் தீர்மானிக்கப்படும்.

* * *

ராசிபுரம் தாலூகாவில் கள்ளு சாராயக்கடை மூடிய பிரதேசத்திற்கு அருகிலுள்ள திருமலைப்பட்டி கிராமத்துக் குடித்தனக்காரர்கள் 69 பேர் கையொப்பமிட்டு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். பக்கத்து கிராமங்களில் செய்திருப்பதுபோல் தங்கள் ஊர் கள்ளு சாராயக்கடைகளையும் மூடி விமோசனம் அளிக்கவேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. இதுபோலவே இன்னும் சில கிராமங்களிலிருந்தும் மகஜர்கள் வந்திருக்கின்றன.

* * * *

கரூருக்கு அருகிலுள்ள கோட்டைமேடு, திருக்காம்புலியூர், தருமாநிலையூர், தாந்தோன்றிமலை முதலிய கிராமங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பார் இனி போதை வஸ்துக்களை உபயோகிப்பதில்லை யென்று பிரதிக்ஞை செய்துகொண்டு இதை நிறை வேற்றிவைக்க பலமான சாதிக்கட்டுப்பாடு செய்திருப்பதாக ஓர் அன்பர் அறிவிக்கிறார்.

# மதுவிலக்குப் பிரசுரங்கள்

---

## குடிகெடுக்கும் கள்

விலை அணா 1.

[தபால் செலவு அரை அணா.]

---

மதுவிலக்கு ஏன்?

பார்த்தாயா தம்பி!

கள்ளுக்கடைக்குப் போகிறாயா?

குடிப்பதுகள்ளல்ல!

மதுவிலக்குப் பாட்டுகள்.

[சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள் ஓரளவிற்குட்பட்டு மதுவிலக்குத் தொண்டர்களுக்கு இலவசமாய் அனுப்பப்பெறும். தபால் செலவுக்காக ஆயிரத்துக்கு ஒரு ரூபாய் வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.]

விலாசம் :—

காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

# மதுவிலக்குப் படங்கள்

கல்வியறிவு அதிகமில்லாத நாட்டில் எவ்விதப் பிரசாரமும் செய்வது மிகவும் கஷ்டமான காரியம். புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் சொற்ப அளவேதான் நமது நாட்டில் பயன் படக்கூடும். ஆனால் சித்திரப் படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதில் நல்ல பயன் உண்டாவது அநுபவத்தில் தெரியவந்திருக்கிறது.

"விளக்குப் படங்கள்" காட்டிப் பிரசாரம் சில விடங்களில் நடைபெறுகின்றது. மங்கலாய்த் தோன்றும் இவ் விளக்குப் படங்கள் கிராமவாசிகளுக்குத் தெளிவாய் விளங்குவதில்லை. கருவிகள் நடுவில் கெட்டுப்போனாலோ எல்லாம் நிறுத்தவேண்டியதுதான்.

நமது கிராமங்களில் நல்ல பயன்தரக் கூடிய முறை பெரிய படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதேயாகும். இதற்கு உபயோகமான மதுவிலக்கு வர்ணப் படங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. சீக்கிரத்தில் அவை விற்பனைக்குத் தயாராகும். சுமார் 30 படங்கள் கொண்ட ஒரு தொகுதியின்

விலை ரூ. 15—0—0.

படங்களைத் துணியில் ஒட்டி, அவைகளை மாட்டுவதற்குரிய சட்டம், கம்பி முதலியவைகளுடன் சேர்ந்து வேண்டுமானால்

**விலை ரூ. 30—0—0.**

விலாசம் :—

**காந்தி ஆசிரமம்,**

திருச்செங்கோடு.

சென்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரால் வெளியிடப்பட்டது.